# உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்

## வருடாந்த அறிக்கையும் கணக்கும்

# 2014

**உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்**
**உள்ளூராட்சிஅமைச்சு**

## உள்ளடக்கம்


1. ஆணையாளர் சபை 58
2. இலக்குநிதியம் ,ஒழுங்கமைப்பு ,நிதியுதவி ,நோக்கம் 59
3. நிறுவனம் பற்றிய விடயம் 60
4. நிர்வாக முறைகள் 61
5. செயற்பாடும் நிதி செலவினங்களும் 64
6. ஆசிய அபிவிருத்தி திட்டங்கள் 67
7. கணக்காய்வுமற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 69


**நிதிவிபரங்களும்தகவல்களும்**


8. வரவு செலவுக் கணக்கு 73
9. ஐந்தொகை 74
10. காசுப் பாய்ச்சல் அறிக்கை 76
11. கணக்கிடலின் கொள்கைப் பிரகடனம் 86
12. கடன் வழங்குவதன் சுருக்கம் 91
13. வரைபட விமர்சனம் 93
14. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 101

# உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் ஆணையாளர் சபை

**(2014.12.31** ஆம் திகதி வரையும்**)**

## தலைவர்

01. திரு.ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க -செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

## திறைசேரி பிரதிநிதித்துவம்

02. திரு. என். குலசேகர - பிரதம கணக்காளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

## அங்கத்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 03 | திரு.எச்.எம்.பீ.ஜீ.ஹேரத் | உள்ளூராட்சி ஆணையாளர் | (வட மேல் மாகாணம்) |
| 04 | திரு. பீ.எச்.என்.ஜயவிக்ரம | உள்ளூராட்சி ஆணையாளர் | (மத்திய மாகாணம்) |
| 05 | திருமதி.டபிள்யு.ஏ.ரீ.மானெல் | உள்ளூராட்சி ஆணையாளர் | (வடமத்திய மாகாணம்) |
| 06 | திருமதி.எஸ்.ஜே.எம்.எச்.சீ.சமரகோன் | உள்ளூராட்சி ஆணையாளர் | (மேல் மாகாணம்) |
| 07 | திரு எல்.எல்.அனில் விஜேசிரி | உள்ளூராட்சி ஆணையாளர் | (ஊவாமாகாணம்) |
| 08 | திரு.டீ.டபிள்யு.எஸ் ராஜபக்ஷ | உள்ளூராட்சி ஆணையாளர் | (சப்பிரகமுவமாகாணம்) |
| 09 | திரு.எம்.வய். சலீம் | உள்ளூராட்சி ஆணையாளர் | (கிழக்குமாகாணம்) |
| 10 | திரு.எம்.ஜெகு | உள்ளூராட்சி ஆணையாளர் | (வடமாகாணம்) |
| 11 | திருமதி.திலேகா குடாச்சி | உள்ளூராட்சி ஆணையாளர் | (தென்மாகாணம்) |
| 12 | திரு.எஸ்.டபிள்யு. கமகே | கௌரவ அமைச்சர் நியமனம் | |
| 13 | திரு. வஜிர ஸ்வர்ண ஶ்ரீ பண்டார | கௌரவ அமைச்சர் நியமனம் | |
| 14 | திருமதி.எச்.எச்.எம். திசாநாயக்க | கௌரவ அமைச்சர் நியமனம் | |

# வருடாந்த அறிக்கையும் கணக்கீடும் - 2014

**உள்ளூர்கடன்கள்மற்றும்அபிவிருத்திஆணையாளர்சபை**
**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்திநிதியம்)**

**நோக்கு:**

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக எல்லைக்குள் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி உதவிகளை வழங்கும் முக்கிய நிதி நிறுவனமாக விளங்கி இந்நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு உதவி புரிவது இதன் பிரதான நோக்கமாகும்.

**முகவுரை :**

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு மிகவும் மிகவும் அவசியமான நிதி உதவிகளை வழங்குவதற்குத் தேவையான நீண்ட கால நிதி உதவி வசதிகளை வழங்கும் உறுதியான மற்றும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக விளங்குதல்.

**எதிர்பார்ப்பு :**

சட்டப்படி அதிகாரத்தைப் பெற்றுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பொதுசன வசதிகளை மேற்கொள்வதற்காக இலகு வட்டியில் நிதி வசதிகளை வழங்குதல் மற்றும் ஆதரவினைப் பெற்றுக் கொடுத்தல்.

**நிதியம் :**

கடன் வழங்குவதற்குரிய சலுகை வட்டி வீதத்தின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் மூலம் நிதியினைப் பெற்று நீண்ட காலத்திற்கு கடனாக வழங்கப்படுகின்றது. அதன் படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் இலக்கம் 1632 SRI (SF) மற்றும் 2201 SRI (SF) ஆகியவற்றின் படி உள்ள நிதியினை சுழற்சி முறையில் நிதியினை சட்டப்படி கடனாக வழங்குவதற்கு உபயோகிக்கப்பட்டு வருகின்றது. 2009 ஆம் ஆண்டில் ரூ.25 மில்லியன் அளவு நிதியினை திறைசேறியிலிருந்து பெற்றுள்ளதுடன் 2010-2014வருடங்களுக்காக நிதி பெறப்படவில்லை.

**நிறுவனம் பற்றிய விபரம்**

**ஒழுங்கமைப்பு :**

இது 1916 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் படி அ,மைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 1930 இன் 06 ஆவது சட்டம், 1931 இன் 25 ஆவது சட்டம், 1938 இன் 43 ஆவது சட்டம், 1942 இன் 21 ஆவது சட்டம், 1949 இன் 29 ஆவது சட்டம், 1974 இன் 09 ஆவது சட்டம் மற்றும் 1993 இன் 24 ஆவது சட்டம் ஆகிய சட்டங்களில் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை ஓர் சட்டபூர்வமான நிறுவனமாகும். இந்நிறுவனமானது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி

மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்பட்டதுடன் மீண்டும் 2015 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது.

**பணிகள்**

இலங்கையில் 23 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 271 பிரதேச சபைகள் என்றவாரு நிறுவப்பட்டுள்ள 341 உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக மூலதன முதலீட்டுக்குத் தேவையான நீண்டகால நிதி வசதிகளை இலகு வட்டிக்கு வழங்குதல் பிரதான பணியாகும்.

இதன் அமைவிடம் : இல 24 A / வாட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி இலக்கம் : 011 -2687514
பெக்ஸ் இலக்கம் : 011 -2691261
மின்னஞ்சல் முகவரி : lldf1916@gmail.com

**ஆணையாளர் சபையின் அமைப்பு**

1993ஆம் ஆண்டு 24ஆம் இலக்கம் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி (திருத்திய) 02 ஆம் இலக்கம் சட்டத்தின் பிரகாரம் ஆணையாளர் சபை கௌரவ அமைச்சர் மூலமாக அமைக்கப்படுவதுடன் அங்கத்தவர்களாக 13 பேர்கள் இருக்க வேண்டும்.

(அ) தலைவர் - உள்ளூராட்சி தொடர்பான அமைச்சின் செயலாளர்
(ஆ) நிதி தொடர்பான அமைச்சினால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவர்.
(இ) ஒவ்வொரு மாகாண சபைகளின் ஆளுநர்களினால் பெயர் குறிப்பிடப்படும் 09 அரச உத்தியோகத்தர்கள்.
(ஈ) கௌரவ அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் மூவர்.

**கணக்காய்வாளர்கள் : கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**
**உள்ளகக் கணக்காய்வு : உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**வங்கியாளர் : இலங்கை வங்கி**
**செயற் குழு உறுப்பினர்கள் :**

**2014** டிசம்பர் **31** ஆம் திகதியிலிருந்து நிதியத்தின் செயற்குழுவானது பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| பிரதான நிறைவேற்று அதிகாரி | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 01 |
| உதவிக் கணக்காளர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 22 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 06 |
| சாரதி | 01 |
| காரியாலய உதவியாளர் | 02 |
| **மொத்தம்** | **34** |

# நிர்வாக முறை

நிறுவனத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் ஆணையாளர் சபையினூடாக செயற்படும் கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடொன்றாக அடையாளப்படுத்த முடியும். நிர்வாக முறையொன்றின் முக்கியமான அங்கமான இந்நிறுவனத்தின் ஒன்றிணைந்த வெற்றி மற்றும் தொடர்ச்சியான பொருளாதார ரீதியான நிலைநாட்டலுக்கு உதவியாக அமையும். உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி அபிவிருத்தி நிதிய ஆணையாளர் சபை, ஒன்றிணைந்த நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வது கொண்டு வியாபார நடைமுறைகள் ஊழலற்று மற்றும் மேல் பொறுப்புக் கூறும் நிலைமைகள் காணப்படுவதற்காக கட்டுப்பட்டுக் காணப்படுகிறது.

**ஆணையாளர் சபை**

**கூடமைப்பு**

ஆணையாளர் சபையின் தலைவர் உள்ளிட்ட பதினான்கு பேர்களைக் கொண்டமைந்ததுடன் அவர்களின் விஷேட அறிவு மற்றும் அனுபவங்கள் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவியாக அமையும். ஆணையாளர் சபை அங்கத்தவர்கள் எவரும் நிறுவனத்துடனான கணக்கு வழக்குகளில் சம்பந்தப்படாததுடன் அது அவர்களது கடமைகளை மேற்கொள்ளும் போது சுயாதீனத்தன்மையினை மேற்கொள்ள உதவியாகக் இருக்கும்.

**தீர்பானம் எடுத்தல்**

ஆணையாளர் சபையின் அங்கத்தவர்கள் மாதம் ஒருமுறை ஒன்றுகூடுவதுடன் அங்கு ஒவ்வொரு நாளும் இடம் பெற்ற விடயங்கள் பற்றி ஆராய்ந்து மிகவும் பொருத்தமான முக்கிய கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படும். மேலும் ஆணையாளர் சபையின் அங்கத்தவர்கள் மூலமாக நிறுவனத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு உரிய வழிவகைகளும் தீர்மானிக்கப்படும்.

**பொறுப்பு**

1. **நிறுவனத்தின் சக்தி, செயற்படும் முறை ஆகியவற்றினை அவதானித்து வியாபார வழிவகைகளைத் தயாரித்தல்.**
2. **மேற்குறிப்பிட்ட வழிவகைகளை செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.**
3. **நடைமுறையிலுள்ள செயற்பாட்டின் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய இடர் முகாமைத்துவம், உள்ளார்ந்த நிர்வாகம், நெறிமுறைகள், நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் நிறுவன சட்டதிட்டங்களுக்கு அமைகின்றனவா என கவனித்தல்.**
4. **முதலீட்டுச் செலவுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் செயற்பாடுகளைக் குறுக்கிட்டு மீள் பரிசீலனை செய்தல்.**
5. **சிரேஷ்ட முகாமைத்துவ செயலாற்றுகையினை மேற்பார்வை செய்தல்.**
6. **தகவல் முறைகள் மற்றும் கணக்காய்வு முறைகளைப் பயனுள்ளவாறு செயற்படுகின்றனவா என மேற்பார்வை செய்தல்.**

**சுதந்திரமான தீர்மானம்**

ஆணையாளர் சபையின் செயற்பாடுகளின் போது அனைத்து ஆணையாளர்களுக்கும் அவர்களது சுதந்திரமான கருத்துக்களை தெரிவிக்க முடியுமாவதுடன், ஏனைய பிரிவுகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட வற்புறுத்தல்களுக்கும் ஏனைய பக்க சார்பான விடயங்களுக்கும் இடங்கொடுக்கக் கூடாது. உபாயவழிவகைகள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளல், உபாயவழி செயற்பாடுகளை கட்டியெழுப்புதல், செயற்றிறன் விமர்சனம் வளங்கள் பங்கீடு மற்றும் வியாபார நடைமுறைகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் ஆணையாளர்களின் அவதானத்திற்கு உட்படுத்தப்படும்.

**தலைவர்** :

தலைவரின் கடமைகள் விபரமாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக நிறுவனத்தின் சுற்றுவட்டத்தினுள் அதன் காரணமாக அதிகார அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும். மனிதர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு ஏற்ப தீர்மானங்கள் மேற்கொள்ளும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவரின் கடமைகள்** :

தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் ஆணையாளர் சபை குறிப்பிட்ட வியூகங்களை நோக்கி வழிகாட்டுவதுடன் தொழில் ரீதியான மனப்பாங்குடன் செயற்படுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆணையாளர் சபை தொழில் ரீதியான திட்டமிடல் மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றுக்காக தலைமைத்துவத்தை வழங்க அவருக்கு முடியும்.

**ஆணையாளர் சபையினை நியமித்தல்**

ஆணையாளர் சபையினை நியமிக்கும் செயல்முறை மிகவும் தெளியாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளதுடன் அது உரிய கட்டளைச் சட்டத்தின் மூலம் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது

**கணக்காய்வும் பொறுப்பும்**

**நிறுவனத்தின் நிலைமையும் எதிர்கால மதிப்பீடும்**

தேசிய சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணையாளர் சபையின் சிபார்சின் படி இந்நிறுவனத்தின் எதிர்காலத் நோக்குக்கு அமைய அரச துறையின் “சீ” வகுப்பின் நிறுவனமொன்றாக செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஊழியர் சபை மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய உதவிப் பணிப்பாளர்கள் இருவர் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முறையான உள்ளக நிர்வாக முறையினைக் கொண்டுநடாத்துதல் மற்றும் அபாய முகாமைத்துவம்

ஆணையாளார்களினால் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படும் உள்ளக நிர்வாகம் மற்றும் அபாய முகாமைத்துவம் ஊடாக நிறுவனத்தின் முதலீடுகள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்புத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் உள்ளக நிர்வாக முறைகளில் காணப்படும் பிரத்தியேக குறைபாடுகள் காரணமாக ஏற்படும் பிழைகள் மற்றும் ஊழல்கள் சம்பந்தமாக ஆணையாளர் சபை அறியச் செய்யப்பட்டுள்ளது.

**உள்ளக நிர்வாக முறைகளில் உள்ள குறைநிறைகள் பற்றி அடிக்கடி மேற்கொள்ளப்படும் விசாரணைகள்**

ஆணையாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள் மூலமாக செயற்படுத்தப்படும் விசாரணைகளில் உள்ளக நிர்வாக முறைகளில் உள்ள குறை நிறைகள் பற்றிய அவதானம் நிர்வாக சபைக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு நிர்வாக சபையினால் உரிய செயல் முறையினை மெற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நிதி அறிக்கை சமர்ப்பித்தல்**

நிர்வாக சபை ஆணையாளர்கள் மூலம் நிறுவனத்தின் நிதி அறிக்கை இலங்கை அரச கணக்குகள் நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதி அறிக்கை சமர்ப்பித்தல் தற்போது காணப்படும் உரிய நீதி மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே நிதி அறிக்கை கணக்காளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதாகவும் உறுதி செய்யப்படுகிறது.

**தொடர்ச்சியான செயற்பாடு**

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் உரிய நிலைப்பாட்டின் அடிப்படையில் அதன் வியாபார நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

**சட்டப்படியான பொறுப்பு**

ஆணையாளர்களினால் அவர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப அரசுக்கு இருக்கும் நிதிப் பொறுப்பு மற்றும் அரசியலமைப்பு என்றவகையில் ஊழியர்களுக்கு காணப்படும் பொறுப்புக்களுக்காக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது அல்லது அது தொடர்பாக போதிய ஒதுக்கீடு நிறுவனத்தின் நிதி அறிக்கைகளில் கருத்திற் கொள்ளப்ப்பட்டுள்ளது என்பது தொடர்பாக திருப்தியடைந்து காணப்படுகின்றது.

**ஏனைய நிறுவனங்களுடன் உள்ள தொடர்புகள்** :

**ஊழியர்கள்**

நிர்வாக சபை இந்நிறுவனத்தினை அமைப்பதற்கான இலக்கு பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் நிறுவனத்தில் உள்ள சகல உத்தியோகத்தர்களும் அறிந்துள்ளனர். ஆகக் குறைந்தளவேனும் எந்தவொரு தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனத்தில் தொழில்வாய்ப்பு வழங்கப்படவில்லை. நிறுவனத்தின் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வு என்பவற்றிற்காக ஜாதி, பேத இன வேறுபாடு ஆகிய வேறுபாடுகள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

**விதிமுறைகளையுடைய நிறுவனம்**

திறைசேரி, உரிய அமைச்சு மற்றும் தேசிய வருமானத் திணைக்களம் என்பவற்றுடன் முறையான தொடர்பொன்றினை கொண்டு செல்வது தொடர்பாக நிர்வாக சபை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிலையான தன்மை மற்றும் செயற்பாடுகள் உரிய நிறுவனத்தினூடாக வெளியிடப்படும் நீதி மற்றும் உத்தரவுகள் உரியமுறைப்படி பின்பற்றப்படுவது மூலம் மற்றும் நாட்டில் காணப்படுகின்ற நீதிகளுக்கு ஏற்ப இணங்கி நடப்பது உணரப்பட்டுள்ளது.

**சுற்றாடல்**

நிறுவனம் மற்றும் உத்தியோகத்தர்களின்விசுவாசத்தினைப் பயன்படுத்துவது கொண்டு சூழல் வலையமைப்பினை உயர்ந்ததாக கொண்டு செல்வது தொடர்பாக நிர்வாக சபை மூலமாக விஷேட கவனத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

# நடவடிக்கைகள் மற்றும் நிதிச் செயற்பாடுகள்

**2014 ஆம் ஆண்டின் வினைத்திறமை**

2014வருடத்தில் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு கடன் வழங்குவதற்காக ரூபா. 600 மில்லியன் நிதியினை வழங்குவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. வருடத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் 34இற்கு வழங்கப்பட்ட மொத்த கடனின் அளவு ரூபா. 303மில்லியன் ஆகும். உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் 50 % என்பதுடன் நிதியத்தின் செயற்பாடுகள் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கின்றது. இந்தக் கடனானது இலகு வட்டி வீததில் 5-10 வருடங்களில் மீளச் செலுத்த வேண்டும்.

2014ஆம் ஆண்டில் கடன் வழங்கப்பட்ட பற்றிய சாராம்சம் பின்வருமாறு;

| | செயற்றிட்ட வகைகள் | வட்டி வீதம் | நிதி (ரூ.) | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | உபகரணங்கள் கொள்வணவு செய்தல் | 9.0% | 86,415,000 | 08 |
| 2 | பிண எரிப்பு நிலையம் அமைத்தல் | 6.5% | 63,400,000 | 11 |
| 3 | பொது சந்தை கட்டிடம் அமைத்தல் | 9.0% | 90,192,730 | 06 |
| 4 | வராந்தச் சந்தை அமைத்தல் மற்றும் அபிவிருத்தி | 6.5% | 47,575,000 | 04 |
| 5 | உழவு இயந்திரம் கொள்வணவு செய்தல் | 9.0% | 3,000,000 | 01 |
| 6 | டபிள்கப் வாகணம் கொள்வனவு செய்தல் | 9.0% | 6,000,000 | 01 |
| 7 | குடிநீர் திட்டம் | 7.0% | 5,000,000 | 01 |
| 8 | ஏனைய வருதானம் கூடிய வேலைத்திட்டங்கள் | 9.0% | 1,810,000 | 02 |
| | **மொத்தம்** | | **303,392,730** | **34** |

**வருமானம்**

கிடைக்கப் பெற்ற சராசரி வருமானம் ரூ.மில் 164ஆகும். (ஆசிய அபிவிருத்தி வங்கி வேலைத்திட்டத்தினூடாக வழங்கப்பட்ட கடனும் உள்ளடங்களாக). அதற்கு மேலதிகமாக அரச வங்கிகளில் சுழற்சி நிதி முதலீட்டின் ஊடாக ரூபா. மி.18.9கிடைக்கப் பெற்றுள்ளது. நிறுவனத்தின் நிர்வாக செலவு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மானியங்களை வேறுபடுத்தியன் பிற்பாடு நிகர நட்டம் ரூ.மி.56ஆகும். (கணக்குப் புத்தக்கங்களுடன் பொருந்தும் பிரதான பகுதி ரூபா 195 மில்லியன் ஆகும்.) மேலும் **2014** ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட கடன் சேதத்தின் பெறுமதி ரூபா. 96மில்லியன் ஆகும், அதற்கேற்ப வரி செலுத்த முன்னுள்ள நட்டம் ரூபா. 134ஆகும்).

**2014ஆண்டில் வட்டி வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம் மற்றும் திறைசேரிக்கு வட்டி செலுத்துதல்**
**( செயற்றிட்டங்களுக்கு ஏற்ப)**

(ரூ.மி.)

| | LLDF | PCDP | UDLIHP | LGIIP | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 54.4 | 5.9 | 120.5 | 142.7 | 323.5 |
| திறைசேரிக்கு வட்டி செலுத்துதல் | 18.6 | 5.2 | 100.1 | 35.5 | 159.4 |

**2014 வருடத்தில் முதலீட்டு வருமானம் பின்வருமாறு**

(ரூ.மி.)

| | LLDF | PCDP | UDLIHP | LGIIP | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| திரைசேரி விலைப்பட்டியல் | 0.8 | - | 2.6 | 0.9 | 4.3 |
| நிலையான வைப்பு வட்டி | 2.2 | - | 4.8 | 0.09 | 7.09 |
| நிதி முகாமைத்துவக் கணக்கு | 0.9 | - | 2.4 | 3.9 | 7.2 |
| மொத்தம் | 3.9 | - | 9.8 | 4.89 | 18.59 |

**கடந்த 05 வருடங்கலில் மொத்த வருமானம் –2010 – 2014**

(ரூ.மி.)

| வருடம் | வரி செலுத்துவதற்கு முன்னரான மொத்த இலாபம் (ரூபா மில்லியன்) |
|---|---|
| 2010 | 11.0 |
| 2011 | -47.0 |
| 2012 | (335.4) |
| 2013 | (246.4) |
| 2014 | (134.1) |

**திறைசேரிக்கு கடனைத் திருப்பிச் செலுத்துதல்**

2014ஆம் ஆண்டில் உள்ளூர் நிதியத்திற்காக கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி நிதி என்றவாறு முறையே ரூபா.22.5மில்லியன் மற்றும் ரூபா. 18.6மில்லியன் திறைசேரிக்கு திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கான வீட்டுத்திட்டத்தின் கீழ் ரூபா. 90.8 மில்லியன் கடன் தவணைப் பணமாகவும் ரூபா.100மில்லியன் வட்டியாகவும் திறைசேரிக்கு மீண்டும் செலுத்தப்பட்டுள்ளது, உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா.35.5மில்லியன் வட்டியாகவும் திறைசேரிக்கு திருப்பிச் செலித்தப்பட்டுள்ளது. மேலும், பல்லின பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூபா. 3.8மில்லியன் கடன் தவணைப்பணமாகவும் ரூபா.5.2மில்லியன் வட்டியாகவும் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

(ரூ.மி.)

| | தவணைப் பணம் செலுத்துதல் | வட்டி செலுத்துதல் | மொத்தம் |
|---|---|---|---|
| LLDF | 22.5 | 18.6 | 41.1 |
| PCDP | 3.8 | 5.2 | 9.0 |
| UDLIHP | 90.8 | 100.0 | 190.8 |
| LGIIP | - | 35.5 | 35.5 |
| மொத்தம் | 117.1 | 159.3 | 276.4 |

**கடனை மீண்டும் அறவிடல்**

வருடத்தில் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் சுழற்சி நிதியத்திலிருந்து பெற்றுக் கொடுத்த கடன் தவணையாக ரூபா. 130.0 மில்லியன் உம் வட்டியாக ரூ.53.6 மில்லியனும் உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து திருப்பி அறவிடப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் வீட்டுக் கடன் செயற்றிட்டத்தின் ஊடாக ரூபா. 89.6 மில்லியன் கடன் தவணையாகவும் ரூபா.80.0 மில்லியன் வட்டியாகவும் அறவிடப்பட்டுள்ளது. மேலும், பல்லின பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தினூடாக ரூ. 1.5 மில்லியன் கடன் தவணைப் பணமாகவும் ரூ.7.3 மில்லியப் வட்டியாகவும் அறவிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் ரூ.116.2 மில்லியன் தவணைப் பணமாகவும் ரூ.143.2 மில்லியன் வட்டியாகவும் திருப்பி அறவிடப்பட்டுள்ளது.

(ரூ.மி.)

| | தவணை அறவீடு | வட்டி அறவீடு | மொத்தம் |
|---|---|---|---|
| LLDF | 130.0 | 53.6 | 183.6 |
| PCDP | 1.5 | 7.3 | 8.8 |
| UDLIHP | 89.6 | 80.0 | 169.6 |
| LGIIP | 116.2 | 143.2 | 259.4 |
| மொத்தம் | 337.3 | 284.1 | 621.4 |

# ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்றிட்டம்

**ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1632 SRI (SF) - (UDLIHP)**
**நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானமுடையோரின் வீட்டுத்திட்டம்.**

நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் மேலுள்ள செயற்றிட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் திருப்பி அறவிடுகின்ற நிறுவனமாக தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் செயற்படுகின்றது. இச் செயற்றிட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் 27 ற்காக வழங்கப்பட்ட கடனின் பெறுமதி ரூ.2,270 மி. ஆகும்.இச்செயற்றிட்டத்தின் ஊடாக 70% கடன் அறவிடப்பட்டதுடன் மிகுதி செயற்றிட்டங்களின் கடன் மீள அறவிடுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. அதற்கு பிரதானமான காரணாமாக இருக்கக் கூடியது இச் செயற்றிட்டத்தின் மூலமாக கட்டப்பட்ட சந்தைத் தொகுதி தோல்வி கண்டதன் காரணமாக ஏனைய பல செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளதெனலாம்.

**கடந்த 05 வருடங்களுக்குரிய கடன் அறவீட்டின் முன்னேற்றம்** (UDLIHP)

(ரூ.மி.)

| வருடம் | கடன் தவணை அறவீடு | வட்டி அறவீடு |
|---|---|---|
| 2010 | 62.1 | 93.6 |
| 2011 | 71.7 | 102.4 |
| 2012 | 76.6 | 93.5 |
| 2013 | 82.4 | 90.3 |
| **2014** | 89.6 | 80.0 |

**ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம்2201 SRI (SF)**
**உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம்**

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 2201 SRI (SF) உடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் அந்தக் கடனை மீள் அறவிடுதல் ஆகிய செயற்பாடுகள் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக ஜனவரி 2006 ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய கடன்கள் அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றிற்கு இடையே செயற்றிட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மேலுள்ள செயற்றிட்டட்டத்தின் கீழ் நகர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை நகரச் சேவைகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் பன்முகப்படுத்தல் செயற்பாடுகள் உள்ளடங்கும். அதன் கீழ் பிரதானமாக 05 பிரிவுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

1. கிராமிய நீர் விநியோகம்.
2. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வீதிகளின் அபிவிருத்தி.
3. திண்மக்கழிவு முகாமைத்துவம்.
4. நகர வடிகாலமப்பு மற்றும் கழிவுநீர்த் தொகுதி அபிவிருத்தி
5. சிறியளவில் மக்களின் அடிப்படை வசதிகளை வழங்குதல் (அடிப்படை சுகாதார மருத்துவமனைகள் மற்றும் நூலகங்கள் போன்றன)

மேற்படி செயற்றிட்டம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு ஊடாக செயற்படுத்தப்படுகின்றது என்பதுடன் உள்ளூராட்சி நிறுவனங்களிற்குகடன் வழங்குதல் , மற்றும் அவற்றை மீளப் பெறல் ஆகிய பொறுப்புக்கள் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி அமெரிக்க டொலர் 42.5 மில்லியன் ஆகும், இந்த 100% மும் நிதியாக தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு திறைசேரியினால் கிடைக்கப் பெறுவதோடு 08 வருட சலுகைக் காலத்துடன் 32 வருடங்களில் திறைசேரிக்கு மீண்டும் திருப்பிச் செலுத்த வேண்டும். சலுகைக் காலத்தில் வட்டி 1% ஆக இருப்பதுடன் சலுகைக் காலத்தின் பின்னர் அது 1.5% ஆகும்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழக்கப்படும் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்படும் கடன் மற்றும் மானியம் ஆகிய இருபிரிவுகளாகும். உள்ளூராட்சி நிறுவனங்களின் வகைப்படுத்தலுக்கு ஏற்ப கடன் தொகையானது 33% இலிருந்து 53% வரையாக அமைவதோடு நங்கொடைகள் 40% இலிருந்து 60% வரை வழங்கப்படும். இக்கடன்களை வழங்குவது கடன் வழங்கப்பட்ட 9% ஆன வட்டி நிதியிலிருந்து ஆகும். எனவே, இத்திட்டத்தினை உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் கூடிய கவனமெடுக்க வேண்டும்.

உப செயற்றிட்டங்கள் பற்றிய உண்மை நிலையானது உள்ளூராட்சி நிறுவனங்களின் நிகர வருமானத்தைப் பொறுத்துள்ளது. நிதி மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஆளுமை அபிவிருத்திச் செயற்பாடுகள் முக்கியமான அங்கமாவதுடன் அப்பிரிவினைச் செயற்படுத்துவதன் மூலம் உள்ளூர்க் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீள அறவிடலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன் கடன் தொகையினை செலுத்தாது விடுவதன் இடர்பாடுகள் குறைக்கப்படும். அத்துடன் கடன் மீளச் செலுத்துவது உரிய முறைப்படி நடைபெறுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி நிலைமைகள் வலுவானதாகவும் முறையானதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறே நிதியத்திலிருந்து மீண்டும் கடன் பெறுவதற்காக அதன் சாதகமான தன்மைகள் அத்தியாவசியமாகும், உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தில் நோக்கம் மேலுள்ளவாராகும்,

# கணக்காய்வும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கையும்
## 2014ஆம் வருடம்

2005.07.01ஆம் திகதிய அரசாங்க வியாபார சுற்றறிக்கையின் பீ.ரீ 31/.இன் பிரகாரம் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய ஆணையாளர் சபையினால் கணக்காய்வு மற்றும் முகமைத்துவக் குழு நியமிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் இருவருடன் அமைச்சின் உள்ளக கணக்குப் பரிசோதனை உத்தியோகத்தரும் உள்ளடக்கிய மூவருடன் கணக்காய்வுக் குழு செயற்பாடு ஆணையாளர் சபையில் உறுப்பினராகவிருக்கும் திறைசேரியின் உத்தியோகத்தர் அதன் தலைவராகவும் கணக்காய்வு நாயகத்தின் திணைக்கள பிரதிநிதி அதன அவதானிப்பு மற்றும் வளங்களை மேற்கொள்ளல் போன்றவற்றிற்காக பங்குபற்றுவார். பிரதான நிறைவேற்று அதிகார சபையினை ஒழுங்குபடுத்துபவராக விளங்குவார் குறிப்பிட்ட வருடத்தில் மூன்று முறை குழுவானது கூட்டப்பட்டதுடன் ஒவ்வெ.

**(01) கணக் காய்வு திணைக்களத்தினால் பெறப்பட்டுள்ளஆலோனைக்கு அமைய 2012 மற்றும் 2013 ம் ஆண்டுகளில் நிதிஅறிக்கையினைதயாரித்த**

2012மற்றும் 2013 ஆண்டுகளுக்குறிய இறுதி கணக்கறிக்க இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட இலங்கை நிதி அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டிய கணக்குவைப்பு நியமத்திற்கு (SLTRS) அமைய தயாரிப்பதற்காக அனுபவம்பெற்ற கணக்கய்வாலர் தெழில் புரியும் நிறுவனத்தின் மூலம் மேற்அகொள்வது மிகவும் நல்லதுதென்று ஆலோசனை வழங்குதல் மற்றும் அவ்நிதி அறிக்கையினை விரைவில்பெற்றுக்கொண்டு கணக்காய்வுக்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்குதல் .

(02) செயற்பணிக்குழுவினை பயிற்றுவித்தல் புதிய கணக்குவைப்பு தரத்திற்கு அமைய நிதி அறிக்கையனை தயாரிப்பதற்காக நிறுவனத்தின் பணிக்குழுவினரை பயிற்றுவிக்குமாறு ஆலோசனை வழங்குதல்.

**(03) 2014 ம் ஆண்டுக்குரிய ஒன்றினை செயற்திட்டம்மற்றும்செயற்பாடு திட்டத்தினைத் தயாரித்தல்.**

நிறுவனத்தின் 2014 ம் ஆண்டுக்குரிய வாறு ஒன்றனைந்த திட்அமைடம் செயற்படுதிட்டம் ஆகியவற்றினை தற்காலத்திற்கு ஏற்றவாறு அமைத்து வைப்பதற்கு ஏற்றவாறு ஆலோசனை வழங்குதல்.

(04) 2011 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் ,அதனுடாக சுட்டிக்கட்டப்பட்ட விடயங்களை சீர்செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக நிறுவனத்தீர்கு சமர்பிக்கப்பட்டது .விசேடமாக,

அ) படுகடன்) அறவிடமுடியாக் கடன் (ஆசிய அபிவிருத்து வங்கி கடன் இலக்கம்)899 PCDP) மற்றும் (UDLIHP) ஆசிய அபிவிருத்து வங்கியின் கடன் உதவியுடன் விவசாய அமைச்சின் ஊடாகசெயற்படுத்தப்பட்டு வந்த மேற்பாடு பயிர்ச்செய்கைக்குரிய திட்டம்) PCDP)-899 SRI (SF) மற்றும் நகர அபிவிருத்து அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வருமானம் குறைந் தோருக்கான வீட்டுத்திட்டம் (UDLIHP)-1632 SRI(SF). மேலும், கடன் மீளச் செலுத்துவதற்கு தவறியுள்ள உள்ளூராட்ச்சி நிறுவனங்கள் தொடர்பாக அந்த நிறுவனத்துடன் உடன்பட்டுக்கு வந்து கடனதொகையினை மீளப்பெறுவதற்காக ஆலோசனை பெற்றுக்கொடுத்தல்.

**ஆ) வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன்கள்.**

1980 ஆம் ஆண்டிற்கு முன்னர் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்பட்ட யுத்த நிலைமைகள் காரணமாக 30 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடன் மீள அறவிடுவஹில் சிக்கல்கள் காணப்பட்டன. அந்தக் கடன்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களுடன் நீண்டகாலம் **கலந்துரையாடப்பட்டதன் விளைவாக அந்தக் கடன் தொகையினை மீள அறவிடுவதற்குரிய சாத்தியக்கூறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன**.

(05) **நிலுவைக் கடன் அறவீடு**

வெளிநாட்டு வேலைத்திட்டங்கள் ஊடாக கடன் தொகை வழங்கப்பட்டு காணப்படுகின்ற நிலுவைக் கடன் தொடர்பாக மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பாக அறிக்கையொன்று திறைசேரியின் செயலாளருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(06) **உள்ளூராட்சி நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைத் திருத்தி அமைத்தல்.**

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ல கடன் தொகை தொடர்பாக எடுக்கப்பட்ட முறிகளை வலுவூட்டுதல். உதா. கடன் தவணையினை உரிய முறைப்படி அறவிடுவதற்காக அதிகாரம் கிடைக்கும் விதமாக செல்லுபடியற்றதாக்க முடியாதவாறு சட்டப்படியான உறுதிப்பாடொன்றினை வங்கியிலிருந்து உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளல்.

(07) **கணனி மென்பொருள் தொகுதி**

நிறுவனத்திற்கு பொருத்தமான விதமாக முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான கணனி மென்பொருள் வேலைத்திட்டமொன்றின் தேவைப்பாடு குழு மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிறுவன வலிமையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் (LL&DF Strengthening) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினூடாக தேவையான நிதி அனுசரனை அதற்காக வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் கணனி மென்பொருள் வலையமைப்பினைச் செயற்படுத்துவதில் ஏறாளமான பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அந்தப் பிரச்சினைகளைச் சரிசெய்தல் மற்றும் வெற்றியுடன் செயற்படுத்தல் என்பவற்றுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(08) **ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம்** 2201 SRI (SF) – **உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்.**

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் மீளப் பெறும் செயற்பாடுகள் வேலைத்திட்டத்தின் பிரிவு “பீ” இன் கீழ் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட முழு நிதியும் அமெரிக்க டொலர் 42.5 மில்லியன் ஆகும். (SDR 24.6 Million) இது 100% கடனாக திறைசேரியில் இருந்து கிடைக்கின்றதுடன் திறைசேரிக்கு மீண்டும் செலுத்த வேண்டும். 8 வருடத்திற்கு வட்டி 1% வீதம் ஆவதுடன் அதன் பின்னர் 1.5% ஆகும்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கடன் மீள அறவிடுவதற்காக உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பெறுமதி ரூபா.4,429 மில்லியன் நிதியில் கடனாக மீள அறவிடக்கூடியது ரூபா. 1,721 மில்லியன் ஆகும். எஞ்சியது நன்கொடையாகும்.

**(09) உள்ளகக் கணக்காய்வுகள் அறிக்கை - 2012**

2012 ஆண்டுகளில் உள்ளகக் கணக்கு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டதுடன், அதனூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களைச் சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. விஷேடமாக

**(10) கொடுக்கல் வாங்களைப் கணக்குப் பேரேடுகளில் பதிதல்**

கடன் நிலுவைத் தவணை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கு உரிய கொடுக்கல் வாங்கல்கள் பேரேடுகளில் பதிவது தாமதமாக இருப்பது ஊழியர்களின் பற்றார்க்குறை என அவதானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஊழியர்களில் பற்றார்க்குறை காணப்படுகின்ற பதவிகளுக்காக உடனடியாக இணைத்துக் கொள்வதன் மூலம் உரிய கணக்குப் பேரேடுகளை பூரணப்படுத்துவதற்க்ய் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**(11) பொருள் மதிப்பீடு**

2014 ஆம் ஆண்டுகளுக்குரிய உரிய பொருள் மதிப்பீடு உடனடியாக செய்து அந்த அறிக்கையை உள்ளகக் கணக்காய்வுகள் அதிபதிக்கு உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**2014 ஆம் ஆண்டு சபையின் அங்கத்தவர்கள்**

| | | |
|---|---|---|
| திரு. என்.குலசேசகர அவர்கள் | திறைசேரிப் பிரதிநிதித்துவம் | தலைவர் |
| திரு. வஜிர ஸ்வர்ண ஸ்ரீ பண்டார அவர்கள் | கௌரவ அமைச்சரின் நியமனம் | உறுப்பினர் |
| திருமதி. ஆர்.எம். தர்மலதா அவர்கள் | உள்ளகக் கணக்குப் பரிசோதகர் (மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு) | உறுப்பினர் |
| ஈ.ர .கே.பி .எதிரிசிங்க. | கணக்காளர் நாயகத் திணைக்களம் | அவதானம் |

# நிதிப்பாய்ச்சல் மற்றும் தகவல்கள்

தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை

( தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்)

2014-12-31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான

**வரவு செலவுக் கணக்கு**

| | குறிப்பு | 2014<br>ரூ.சதம். | 2013<br>ரூ.சதம். |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 19 | 323,611,441.91 | 299,820,521.28 |
| திறைசேரிக் கடன் வட்டி | 20 | (159,448,822.07) | (168,193,753.27) |
| **தேறிய வருமானம்** | | **164,162,619.84** | **131,626,768.01** |
| ஏனைய வருமானங்கள் | 21 | 670,316.06 | 7,546,955.58 |
| நிர்வாகச் செலவுகள் | 22 | (25,991,061.44) | (17,249,939.09) |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான விசேட நிதி | 23 | (195,102,503.09) | (250,162,653.18) |
| **ஒதுக்கீட்டு உபாயம்** | | **(56,260,628.63)** | **(128,238,868.68)** |
| கடன் சேதம் மற்றும் ஏனைய நட்டங்கள் | | (98,819,054.65) | (145,038,356.40) |
| மூலதனச் செலவு | | - | - |
| மூலதன வருமானம் | 24 | 18,966,702.40 | 26,821,303.43 |
| **வரி செலுத்த முன் நட்டம்** | | **(134,112,980.88)** | **(246,455,921.65)** |
| வருமான வரி செலுத்தல் | | (1,300,000.00) | (1,800,000.00) |
| வருமான வரி ஒதுக்கம் | | - | - |
| **வரி செலுத்திய பின் நட்டம்** | | **(135,412,980.88)** | **(248,255,921.65)** |
| ஒன்றிணைந்த நிதியத்துக்கான செலுத்தல் | | - | - |
| தேறிய இலாபம் | | (135,412,980.88) | (248,255,921.65) |
| வருட ஆரம்பத்தில் காணப்பட்ட வருவாய் | | (804,339,321.21) | (556,083,399.56) |
| வருட இறுதியில் காணப்பட்ட வருவாய் | | **(939,752,302.09)** | **(804,339,321.21)** |

தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை
(தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்)
2014-12-31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான
**நிதி நிலைமை அறிக்கை**

| | குறிப்பு | 2014 (ரூ.) | 2013 (ரூ.) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நீண்டகாலச் சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்களும் இயந்திர சாதனங்களும் | 1 | 18,752,097.50 | 2,848,978.70 |
| நிதிச் சொத்து முதலீட்டு முதிர்வு | 2 | 296,085,567.43 | 295,543,011.38 |
| நிதியீடு-உ.அ.வ.வே.தி. | 3 | 1,527,466,141.02 | 1,846,373,896.45 |
| ஊழியர் கடன் | 4 | 4,132,682.51 | 3,255,199.51 |
| **மொத்த நீண்டகாலச் சொத்துக்கள்** | | **1,846,436,488.46** | **2,148,021,086.04** |
| **அசையும் சொத்துக்கள்** | | | |
| கடன் பட்டோர் | 5 | 3,350,479,316.58 | 3,482,315,093.62 |
| கிடைக்க வேண்டிய வட்டி | 6 | 195,286,932.80 | 149,934,571.46 |
| மீளப் பெறக்கூடிய வைப்பு | | 40,051.61 | 40,051.61 |
| கிடைக்க வேண்டிய முதலீட்டு வருமானம் (UDLIHP) | 7 | 2,522,742.00 | 2,522,742.00 |
| சந்தேகமான கணக்கு – உ.அ.வ.வே.தி. | | 199,054.38 | - |
| நிதி இறுப்பு(PMU) | | 19,500,745.64 | 19,500,745.64 |
| நிதி மாற்றமடையும் மிகை | 8 | 78,105,724.11 | 177,750,550.48 |
| **மொத்த அசையும் சொத்துக்கள்** | | **3,646,134,567.12** | **3,832,063,754.81** |
| **மொத்த சொத்துக்கள்** | | **5,492,571,055.58** | **5,980,084,840.85** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நிறுத்தி வைத்திருந்த முதலீடு | 9 | (939,752,302.09) | (804,339,321.21) |
| **மொத்த சம பங்குகள்** | | (939,752,302.09) | (804,339,321.21) |

| | | | |
|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | |
| **நீண்டகாலப் பொறுப்புக்கள்** | | | |
| திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன் | 10 | 2,119,104,945.05 | 2,236,290,786.87 |
| செலுத்த வேண்டிய கடன் – உ.அ.வ.வே.தி | 11 | 3,551,530,832.49 | 3,551,530,832.49 |
| நிதியீடுகள் - உ.அ.வ.வே.தி | 12 | 596,055,986.27 | 760,524,537.95 |
| பனிக்கொடைக்கான ஒதுக்கல் | 13 | 2,348,607.37 | 1,782,690.29 |
| தடுத்து வைக்கப்பட்ட செலுத்த வேண்டிய நிதி | | - | - |
| அரச உதவி (முதலீடு) உ.அ.வ.வே.தி | 14 | 6,075,231.07 | 6,075,231.07 |
| மொத்தநீண்டகாலப்பொறுப்புக்கள் | | **6,275,115,602.25** | **6,556,204,078.67** |
| நடைமுறைப்பொறுப்புக்கள் | | | |
| திறைசேரிக்குசெலுத்தவேண்டியவட்டி | 15 | 117,095,176.89 | 187,095,177.09 |
| சந்தேகத்திற்கிடமானவட்டிவரவு | | - | - |
| திட்டமிட்டசெலவுகளின்ஒதுக்கம் | 16 | 9,043,144.92 | 7,980,439.00 |
| முன்னையவருடத்திற்கானவரவு | 17 | 10,990,972.47 | 11,744,499.58 |
| வரிப்பொறுப்புக்கள் | 18 | 577,715.50 | 1,899,222.08 |
| நடைமுறைப்பொறுப்புக்கள் - உ.அ.வ.வே.தி | | 19,500,445.64 | 19,500,445.64 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **157,207,755.42** | **228,220,083.39** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **5,492,571,055.85** | **5,980,084,840.85** |

எச்.ரீ.கே.பத்மஸிரி
தலைவர்
தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
(செயலாளர் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)

டப்.எம்.எம்.பீ.எச்.குணரத்ன
திறைசேரிப் பிரதிநிதி
ஆணையாளர் சபை
தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
(பணிப்பாளர் அரச கணக்குத் திணைக்களம்)

ஏ.கே.பீ.எஸ். அமரசிரி
பிரதான கணக்காளர்
தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்

தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை
(தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்)
**2014/12/31 ஆம் திகதி முடவடைந்த வருடத்திற்கான**
**நிதி நிலைமை அறிக்கை**

| | 2014 (ரூ.) | 2013 (ரூ.) |
|---|---|---|
| **செயற்பாடுகளுக்கான நிதிப்பாய்ச்சல்** | | |
| வரி செலுத்த முன்னர் இலாபம் | (134,112,980.88) | (246,455,921.65) |
| **கூட்டுதல்** | | |
| வட்டி செலுத்துதல் | - | - |
| வட்டி கிடைத்தல் | (18,966,702.40) | (26,821,303.43) |
| தேய்மான ஒதுக்கம் | 2,245,807.60 | 1,200,083.50 |
| பணிக்கொடைக்காக ஒதுக்கல் | 565,917.08 | 338,722.29 |
| முன்னைய ஆண்டுகளைச் சரிசெய்தல் | - | - |
| நடைமுறைக் கணக்கு | (199,054.38) | (559,414.61) |
| **குழு மூலதனத்தைச் சரிபார்க்க முன் இலாபம்** | **(150,467,012.98)** | **(271,179,004.68)** |
| குறைவு / அதிகரிப்பு – கடன் பட்டோர் | 86,83,415.70 | 133,155,637.37 |
| குறைவு /அதிகரிப்பு - மானியம்-உ.அ.வ.வே.தி | 318,907,775.43 | 208,211,076.72 |
| குறைவு / அதிகரிப்பு –கடந்த வருடங்களுக்காக கிடைக்கப் பெற்றவை | (753,527.11) | 8,832,547.04 |
| குறைவு / அதிகரிப்பு –ஊழியர் கடன் பட்டோர் | (877,483.00) | (575,534.49) |
| குறைவு / அதிகரிப்பு – திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன் வட்டி | (70,000,000.00) | 187,095,177.09 |
| குறைவு / அதிகரிப்பு - வியாபாரக் கடன் பட்டோர் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 1,062,705.92 | 1,005,621.69 |
| குறைவு / அதிகரிப்பு - கிடைத்தல் | (117,185,841.82) | (126,173,176.29) |
| **செயற்பாடுகளுக்கான நிதிப்பாய்ச்சல்** | **67,170,011.94** | **140,372,344.45** |
| திறைசேரிக்கு வட்டி செலுத்துதல் | - | - |
| வட்டி கிடைத்தல் | 18,966,702.40 | 26,821,303.43 |
| நிறுத்தி வைக்கப்பட்ட வரி | (1,280,876.65) | (1,335,786.00) |
| வருமான வரி செலுத்துதல் | (1,340,629.93) | (1,407,663.00) |
| **செயற்பாடுகளுக்காக தேறிய நிதி வழங்கல்** | **83,515,207.76** | **164,450,198.88** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக நிதி வழங்கல்** | | |
| நிலையான் சொத்து மற்றும் இயந்திரங்கள் | (18,148,926.40) | (49,500.00) |
| நிலையான சொத்துக்களை அகற்றுதல் | - | - |
| நிலையான வைப்புக்கள் | - | (10,000,000.00) |
| திறைசேரிச் சிட்டைகள் | (542,556.05) | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(18,691,482.45)** | **(10,049,500.00)** |

| | | |
|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாடுகள் மூலம் காசுப் பாய்ச்சல்** | | |
| கடன் வழங்குதல் | - | 1,425,354.54 |
| கடன் அறவிடுதல் | (164,468,551.68) | (37,099,247.40) |
| **முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்** | (164,468,551.68) | **(35,673,892.86)** |
| **கழித்தல்/ கூட்டல் வருடத்தினுள் நிதி முரண்பாடு** | **(99,644,826.37)** | **118,726,806.02** |
| வருட ஆரம்பத்தில் நிதி முரண்பாடு (குறிப்புA) | **197,251,296.12** | **78,524,490.10** |
| வருட இறுதியில் நிதி முரண்பாடு (குறிப்புA) | **97,606,469.75** | **197,251,296.12** |

**குறிப்பு A**

| **நிதி முரண்பாடு** | **2014** | **2013** |
|---|---|---|
| **Rs. Cts.** | **Rs. Cts.** | **Rs. Cts.** |
| சேமிப்புக் கணக்கு | 99,097,476.70 | 165,666,792.55 |
| நிதி இறுப்புPMU | 19,500,745.64 | 19,500,745.64 |
| வங்கியில் உள்ள நிதி | (20,991,752.59) | 12,083,757.93 |
| **வருட இறுதியில் நிதி முரண்பாடு மீதி** | **97,606,469.75** | **197,251,296.12** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை** | | | |
| | தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் | | | |
| | **மீதி அறிக்கைக்கான குறிப்புக்கள்**<br>**2014/12/31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான** | | | |
| 1 | **நிலையான சொத்துக்கள்** | | | |
| | **செலவுகள்** | | | |
| | **விபரம்** | **01.01.2014**ஆம் திகதிக்கு செலவு | கூட்டுதல் / கழித்தல் | **31.12.2014**ஆம் திகதிக்கு செலவு |
| | அலுவலகக் கட்டடங்கள் | 2,056,196.16 | 137,985.50 | 2,243,681.66 |
| | தளபாடம் மற்றும் உபகரணங்கள் | 606,563.15 | 4,544,309.47 | 5,150,872.62 |
| | கணனி வன்பொருள், மென்பொருள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 4,546,364.00 | 2,349,238.00 | 6,895,602.00 |
| | சொத்து – திட்ட முகாமைத்துவ அலகு | 1,389,013.55 | 3,122,393.43 | 4,511,406.98 |
| | | | 7,995,000.00 | 7,995,000.00 |
| | **மொத்தம்** | **8,647,636.86** | **18,148,926.40** | **26,796,563.26** |
| | **ஒட்டுமொத்த தேய்மான ஒதுக்கம்** | | | |
| | **விபரம்** | | | |
| | | **01.01.2014** ஆம் திகதி இருப்பு | உரிய வருடத்திற்குரிய இருப்பு | **31.12.2014**ஆம் திகதி இறுப்பு |
| | அலுவலகக் கட்டடங்கள் | 1,897,254.87 | 82,899.06 | 1,980,153.93 |
| | தளபாடம் மற்றும் உபகரணங்கள் | 118,490.89 | 1,051,169.20 | 1,169,660.09 |
| | கணனி வன்பொருள், மென்பொருள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,854,137.35 | - | 1,854,137.35 |
| | சொத்து – திட்ட முகாமைத்துவ அலகு | 1,928,775.05 | 312,239.34 | 2,241,014.39 |
| | **மொத்தம்** | - | 799,500.00 | 799,500.00 |
| | | **5,798,658.16** | **2,245,807.60** | **8,044,465.76** |
| | **எழுதி விடப்பட்ட மதிப்பு** | **2,848,978.70** | | **18,752,097.50** |

## 02 நிதிச் சொத்துக்கள் -முதலீட்டு முதிர்ச்சி

| | 2014 | 2013 |
|---|---|---|
| நிலையான வைப்புக்கள் | 236,855,292.05 | 236,855,292.05 |
| திறைசேரிச் சிட்டைகள் | 59,230,275.38 | 58,687,719.33 |
| | **296,085,567.43** | **295,543,011.38** |

## 03 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள்(உ.அ.வ.வே.தி)

| | 2014 | 2013 |
|---|---|---|
| 2014 வருடத்தில உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள் | 2,841,795,121.45 | 2,841,795,121.45 |
| கழித்தல்–கொடைகள் (2014முறையே கழித்தல்) | (1,314,328,980.43) | (995,421,225.00) |
| | **1,527,466,141.02** | **1,846,373,896.45** |

## 04 ஊழியர் கடன்

| | 2014 | 2013 |
|---|---|---|
| அனர்த்தக் கடன் | 4,098,682.51 | 3,232,199.51 |
| பண்டிகை முற்பணம் | 34,000.00 | 23,000.00 |
| | **4,132,682.51** | **3,255,199.51** |

## 05 நீண்ட காலச் சொத்துக்கள்- கடன் படுதல்

| | 2014 | 2013 |
|---|---|---|
| cs;Sh; fl; kw;Wk; mgptpUj;jpj;jpl;lk; | 792,304,472.38 | 619,124,948.12 |
| நகர அபி.மற்றும் குறைந்த வருமான வீட்டுத் திட்டம் | 1,616,213,801.13 | 1,706,194,130.12 |
| உ.அ.வ. முன்னேற்றும் திட்டம் | 1,619,525,855.00 | 1,735,734,362.20 |
| .பல்லின பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் | 67,847,622.91 | 69,356,658.37 |
| தேசியநீர்வழங்கல்வடிகாலமைப்புசபை | 8,717,505.22 | 9,215,880.22 |
| | **4,104,609,256.64** | **4,139,625,979.03** |
| கழித்தல் – வருடத்திற்கான ஒதுக்கம் | | |
| 2014.01.01 திகதிக்கு இறுப்பு | 657,310,885.41 | 512,272,529.01 |
| கூட்டல்– வருடத்திற்கான ஒதுக்கம் | 96,819,054.65 | 145,038,356.40 |
| | **754,129,940.06** | **657,310,885.41** |
| 2014.12.31 ஆம் திகதிக்கு இறுப்பு | **3,350,479,316.58** | **3,482,315,093.62** |

| 6 | கிடைக்க வேண்டிய வட்டி - நீண்டகால | 2014 | 2013 |
|---|---|---|---|
| | கிடைக்க வேண்டிய வட்டி- LLDF | 24,350,084.30 | 19,478,744.99 |
| | கிடைக்க வேண்டிய வட்டி- UDLIHP | 95,143,335.83 | 55,524,443.20 |
| | கிடைக்க வேண்டிய வட்டி- PCDP | - | - |
| | கிடைக்க வேண்டிய வட்டி- LGIIP | 74,750,247.63 | 74,931,383.27 |
| | திறைசேரியில் இருந்துகிடைக்க வேண்டிய வட்டி- LGIIP | - | - |
| | கிடைக்க வேண்டிய வட்டி தாமதமாகிய இழப்பீடு - LGIIP | 1,043,265.04 | - |
| | கிடைக்க வேண்டிய வட்டி மேலதிக வட்டி- LGIIP | - | - |
| | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | - | - |
| | | **195,286,932.80** | **149,934,571.46** |
| | செயற்பாடற்ற கடன் - LL&DF | - | - |
| | செயற்பாடற்ற கடன்- PCDP | - | - |
| | செயற்பாடற்ற கடன்- UDLIHP | - | - |
| | | **195,286,932.80** | **149,934,571.46** |

| 7 | கிடைக்க வேண்டிய முதலீட்டு இலாபம்- UDLIHP | 2014 | 2013 |
|---|---|---|---|
| | கிடைக்க வேண்டிய வட்டி (திறைசேரிச் சிட்டை) - UDLIHP | 1,306,001.00 | 1,306,001.00 |
| | கிடைக்க வேண்டிய வட்டி ( நிலையான வைப்பு) - UDLIHP | 1,216,741.00 | 1,216,741.00 |
| | | **2,522,742.00** | **2,522,742.00** |

| 8 | நிதி மாறி | 2014 | 2013 |
|---|---|---|---|
| | சேமிப்புக் கணக்கு | 99,097,476.70 | 165,666,792.55 |
| | கையிலுள்ள காசு | (20,991,752.59) | 12,083,757.93 |
| | | 78,105,724.11 | 177,750,550.48 |

9 **பிடிப்பு வருவாய்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| 2014.01.01 ஆம் திகதி இறுப்பு | (804,339,321.21) | (556,083,399.56) |
| 2014 வருடத்திற்குரிய | (135,412,980.88) | (248,255,921.65) |
| | (939,752,302.09) | (804,339,321.21) |

10 **திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| திறைசேரிக் கடன் நிதி | 231,393,165.24 | 259,968,955.24 |
| நகர அபி.மற்றும் குறைந்த வருமான வீட்டுத் திட்டம் | 1,815,794,838.96 | 1,906,599,867.55 |
| பல்லின பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் | 65,916,940.85 | 69,721,964.08 |
| | 2,119,104,945.05 | 2,236,290,786.87 |

11 **திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| உ.அ.வ.வே.தி | 3,551,530,832.49 | 3,551,530,832.49 |
| | 3,551,530,832.49 | 3,551,530,832.49 |

12 உள்ளூராட்சிநிறுவனங்களுக்குவழங்கியகொடைகள் LGIIP

| | 2014 | 2013 |
|---|---|---|
| **கொடைகள்- வரவுகள்** | 1,102,964,884.09 | 1,102,964,884.09 |
| கழித்தல்- 2014நிதி முறைகள் | (506,908,897.82) | (342,440,346.14) |
| | 596,055,986.27 | 760,524,537.95 |

13 **பணிக்கொடை கொடுப்பனவு**

| | 2014 | 2013 |
|---|---|---|
| பணிக்கொடை ஒதுக்கீடு | 1,782,690.29 | 1,443,968.00 |
| வருடத்திற்கான ஒதுக்கீடு | 565,917.08 | 338,722.29 |
| | 2,348,607.37 | 1,782,690.29 |
| வருடத்திற்கான பணிக்கொடை கொடுப்பனவு | - | - |
| | 2,348,607.37 | 1,782,690.29 |

| 14 | திறைசேரியிலிருந்து வரவு (தவணை) LGIIP | 2014 | 2013 |
|---|---|---|---|
| | சொத்துக்கள்- LGIIP (செலவு) | 7,500,110.62 | 7,500,110.62 |
| | கழித்தல்- திறைசேரியிலிருந்து வரவு((முறையே கழித்தல்) | (1,424,879.55) | (1,424,879.55) |
| | | 6,075,231.07 | 6,075,231.07 |

| 15 | திறைசேரிக்குச் செலுத்தவேண்டிய வட்டி | 2014 | 2013 |
|---|---|---|---|
| | செலுத்தவேண்டிய வட்டி-UDLIHP | 117,095,176.89 | 187,095,177.09 |
| | செலுத்தவேண்டிய வட்டி-PCDP | - | - |
| | செலுத்தவேண்டிய வட்டி -LGIIP | - | - |
| | | 117,095,176.89 | 187,095,177.09 |

| 16 | சேர்ந்த செலவுக்காக ஒதுக்கீடு | 2014 | 2013 |
|---|---|---|---|
| | கணக்காய்வுக் கட்டணம் | 1,645,813.00 | 1,285,813.00 |
| | வருமான வரி | 7,200,000.00 | 6,600,000.00 |
| | சேர்ந்த செலவுகள் | 197,331.92 | 94,626.00 |
| | | 9,043,144.92 | 7,980,439.00 |

| 17 | முன்னைய வரவுகள் | 2014 | 2013 |
|---|---|---|---|
| | முன்னைய வரவுகள் LLDF | 2,146,294.51 | 1,426,709.72 |
| | முன்னைய வரவுகள் UDLIHP | 4,457,541.40 | 3,015,506.00 |
| | முன்னைய வரவுகள் LGIIP | 4,387,136.56 | 7,302,283.86 |
| | | 10,990,972.47 | 11,744,499.58 |

| 18 | நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 2014 | 2013 |
|---|---|---|---|
| | வருட ஆரம்ப இறுப்பு | 1,899,222.08 | 2,842,671.08 |
| | கூட்டல் – வருடத்திற்கான ஒதுக்கம் | 1,300,000.00 | 1,800,000.00 |
| | | 3,199,222.08 | 4,642,671.08 |
| | கழித்தல் - 2013/2014 வருடத்திற்கான கொடுப்பனவுகள் | (1,340,629.93) | (1,407,663.00) |
| | கழித்தல் - தேக்கி வைக்கப்பட்ட வரி | (1,280,876.65) | (1,335,786.00) |
| | 2014.12.31 திகதிக்கு இறுப்பு | 577,715.50 | 1,899,222.08 |

| 19 | வட்டி வருமானம் | 2014 | 2013 |
| --- | --- | --- | --- |
| | LLDF | 54,386,062.03 | 51,154,999.68 |
| | UDLIHP | 120,567,659.50 | 92,909,676.74 |
| | PCDP | 5,105,948.50 | 7,430,732.43 |
| | LGIIP | 142,681,703.28 | 147,407,845.45 |
| | NW&DB | 870,068.60 | 917,266.98 |
| | | 323,611,441.91 | 299,820,521.28 |

| 20 | வட்டி செலவுகள் | 2014 | 2013 |
| --- | --- | --- | --- |
| | LLDF | 18,642,043.92 | 20,378,514.40 |
| | UDLIHP | 100,096,493.06 | 106,288,717.05 |
| | PCDP | 5,194,976.77 | 5,874,564.82 |
| | LGIIP | 35,515,308.32 | 35,651,957.00 |
| | | 159,448,822.07 | 168,193,753.27 |

| 21 | ஏனைய வருமானம் | 2014 | 2013 |
| --- | --- | --- | --- |
| | நிச்சயமற்ற வரவுகள் | | |
| | LLDF | - | - |
| | UDLIHP | - | - |
| | PCDP | - | - |
| | LGIIP | - | - |
| | சேர்க்கப்பட்ட குறை வருமானம் | | |
| | LLDF | - | - |
| | UDLIHP | - | - |
| | PCDP | - | - |
| | LGIIP | 527,555.45 | 2,763,630.48 |
| | ஏனைய வருமானம் | | |
| | LLDF | 142,760.61 | 4,783,325.10 |
| | UDLIHP | - | - |
| | PCDP | - | - |
| | LGIIP | - | - |
| | | 670,316.06 | 7,546,955.58 |

22 **நிர்வாகச் செலவுகள்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| | 8,197,134.51 | 5,700,07.81 |
| ஊழியர் சம்பளம் | 2,862,600.00 | 1,821,600.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 804,375.00 | 240,416.00 |
| போனஸ் கொடுப்பனவு | 475,590.00 | 475,590.00 |
| தலவர் கொடுப்பனவு | 489,324.00 | 72,000.00 |
| ஊக்கக் கொடுப்பனவு - UDLIHP | 163,380.00 | 348,080.00 |
| ஆணையாளர் சபை போக்குவரத்துக் கொடுப்பனவு | 722,400.00 | 672,600.00 |
| ஆணையாளர் சபைக் கொடுப்பனவு | 1,267,967.46 | 894,566.32 |
| E.P.F | 316,991.86 | 223,641.32 |
| E.T.F | 567,917.08 | 338,722.29 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துதல் | 224,912.84 | 168,330.82 |
| மேலதிக மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 236,869.32 | 148,497.00 |
| ஊழியர் நலன்புரிச் சங்கச் செலவுகள் | 94,849.10 | 61,938.00 |
| கூட்டச் செலவுகள் | 360,000.00 | 360,000.00 |
| கணக்காய்வுக் கட்டணம் செலுத்துதல் | 405,998.39 | 213,058.28 |
| தொலைபேசி மற்றும் தபால் | 573,538.19 | 300,156.74 |
| காகிதகிகள் மற்றும் பிரிண்ட் செலவுகள் | 54,400.00 | 54,400.00 |
| வாகனப் பராமரிப்புச் செலவுகள் - 54/6233 | 405,668.43 | 228,227.00 |
| எரிபொருள் | 565,739.65 | 490,308.16 |
| மின்சாரக் கட்டணம் | 356,474.40 | 270,441.20 |
| பாதுகாப்புக் கட்டணம் | 52,025.50 | 38,363.00 |
| நீர்க் கட்டணம் | 262,339.00 | 186,132.40 |
| சுத்திகரிப்புச் செலவுகள் | 419,541.57 | 234,469.43 |
| உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு | 468,022.95 | 40,572.00 |
| ஊழியர் பயிற்சிகள் | 376,716.00 | 969,459.92 |
| கணனி பராமரிப்புட் செலவுகள் | 641,930.00 | 18,350.00 |
| **வரிப்பணம் மற்றும் வரிகள்** | **701,110.00** | **701,110.00** |
| அலுவலக வாடகை | 200,000.00 | - |
| செயற்றிட்டம் | 82,899.06 | - |
| உபகரண இறுப்பு | 1,051,169.20 | 148,914.30 |
| தளபாட இறுப்பு | - | 30,328.17 |
| கணனி மென்பொருள் மற்றும் வன்பொருள் இருப்பு | 312,239.34 | 441,744.55 |
| LLDFபுதுப்பிக்கப்பட்ட சொத்து இறுப்பு | 799,500.00 | 579,096.48 |
| சட்டத்தரணிக் கட்டணம் | - | 4,050.00 |
| வங்கிக் கட்டணம் | 9,695.18 | 948.52 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் – பயணச் செலவுகள் | 1,162,536.41 | 773,799.06 |
| | 25,991,061.44 | 17,249,939.09 |

| 23 | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள்- LGIIP | 2014 | 2013 |
|---|---|---|---|
| | நிலையற்ற கொடைகள்- செலவுகள் | 318,907,755.43 | 383,103,645.50 |
| | நிலையற்ற கொடைகள் - வருமானம் | (123,805,252.34) | (132,940,992.32) |
| | | 195,102,503.09 | 250,162,653.18 |

| 24 | நிதி வருமானம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| | வட்டி வருமானம்- திறைசேரிச் சிட்டை | | |
| | LLDF | 870,127.75 | 1,145,557.04 |
| | UDLIHP | 2,648,651.17 | 4,740,259.50 |
| | PCDP | - | - |
| | LGIIP | 993,244.15 | 1,238,885.02 |
| | வட்டி வருமானம் - சேமிப்புக் கணக்கு | | |
| | LLDF | 996,674.83 | 789,390.81 |
| | UDLIHP | 2,381,857.52 | 1,673,474.65 |
| | PCDP | - | - |
| | LGIIP | 3,945,923.01 | 2,100,961.79 |
| | வட்டி வருமானம் - நிலையான வைப்பு | | |
| | LLDF | 2,180,367.14 | 6,056,833.68 |
| | UDLIHP | 4,854,038.36 | 8,726,176.60 |
| | PCDP | - | - |
| | LGIIP | 95,818.47 | 349,764.34 |
| | | 18,966,702.40 | 26,821,303.43 |

## கணக்கிடலின் கொள்கைப் பிரகடனம்

### ஆவணவாக்கல் பிரிவு

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியமானது )LL&DFசட்டப்படியான ( ஆம் இலக்க 22 ஆம் 1916 நிறுவனமாகஉள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட நிறுவனமாகும்.2014 திசெம்பர் ஆம் திகதி இறுதித் 31 தினத்தில் தனது வருடாந்த ஒன்று திரட்டிய நிதி அறிக்கை வெளியீட்டில் நிறுவன ரீதியாக நிதி வெளியீடுகளையும் அதன் உப நிறுவன விடயங்களையும் இத்துடன் உள்ளடக்கியுள்ளது.உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நடவடிக்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் அபிவிருத்தி திட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவிடுகின்ற கடன்களான அதாவது நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீட்டுத் திட்டம் (UDLIHP), பல் இன பயிர்களுக்கான அபிவிருத்தி திட்டம் (PCDP) மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உட்கட்டமைப்புகளை முன்னேற்றும் திட்டம் (LGIIP) போன்றவைகள் அடங்கும்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் திட்டம் ஆம் ஆண்டு தொடக்கம் 2008 .உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது 2014ஆம் ஆண்டிற்கான கணக்கு மற்றும் நிதி செலவீடுகள் பற்றி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது..

### முறைப்படியான வெளியீடுகள்

மீதிக் கணக்குப் படிவம்வருமானம் பற்றிய வெளியீடு ,கள் ஆகியன இலங்கையின் கணக்கிடல் நிறுவனங்களில் உருவமைக்கப்பட்ட இலங்கை அரச நிறுவனங்களை கணக்கிடும் கொள்கைகளுக்கு (SLFRS) அமைய ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது .

### ஒழுங்குபடுத்தல் முறை

நிதி அறிக்கையானது சட்டப்படியான நிதி வழங்கல் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பண வீக்கத்தினை கருத்திற் கொள்ளாது நிரந்தர சொத்து வருமானம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### சேர் மற்றும் சமர்ப்பிக்கும் நிதி

கிட்டிய சதத்திற்கு ஏற்றவகையில் இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு ஏற்ப நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

திருப்திகரத் தன்மை மற்றும் ஒன்றிணைத்தல்

சமனான செயற்பாடுகள் மற்றும் இயல்புகளை ஒன்றிணைத்து போதியளவு பொருட்கள் வெவ்வேறாகக் காட்டப்பட்டுள்ளது.

#### ஒன்றிணைக்கும் அறக்கட்டளை

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த ,வருமானம் உடையவர்களுக்கான வீட்டுத் திட்டம் (UDLIHP) பல் இன பயிர்களின் அபிவிருத்தித் திட்டம் (PCDP) உள்ளூராட்சி உட்கட்டமைப்புகளை முன்னேற்றும் திட்டம் (LGIIP) ஆகியவற்றினை உப பிரிவுகளாக கணக்கிலிட்டு உண்மையான வருமானம்வேறாகக் செலவுகளை ,

காண்பிக்கப்பட்டு வருடம் முடிவுற்றதும் அனைத்தையும் ஒன்றிணைத்து சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மிகைக் கணக்கில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்ட விடயங்களை திட்டம்) B உப பிரிவுஉள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு உரித்தாக்கப்பட்ட திட்டங்களின் ( ) முகாமைத்துவ நிலையம்PMUஇப்பிரிவுகளின் நிதி .ஊடாக செயற்படுத்தப்படும் ( உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு .அறிக்கைகள் வேறாக காண்பிக்கப்படும் பாதிப்பு இல◌லாத வகையில் முன்னெடுக்கப்படும் செலவுகள் மற்றும் )Aஉபபிரிவுக்குள (வழங்கப்படும் நிதி தவிர சகல சொத்துக்களும் மற்றும் பொறுப்புகள்கணக்குகளின் விபரங்கள் , பற்றியவிடயங்கள் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கணக்குகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டவைகள் நேரடியாக உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ள கடன் ஒன்றிணைந்த B உப பிரிவுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முதலீடுகள் அதனோடு சம்பந்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் ஆகியன ஒன்றிணைந்த அறிக்கைகளுக்கு முன்னுள்ள நிதி அறிக்கையில் கொண்டுவரப்பட்டுள்ளது .

## நிதி மற்றும் நிதிச் சமச்சீர்

நிதி மற்றும் நிதி ஆய்வுகள் எனக் கூறப்படுவனவற்றின் விதிகள் போன்றவைகளை நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளதுடன் சேமிப்பு வைப்பில் உள்ள வங்கிக் கணக்குகளை முன்கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது .

### வைப்பு மற்றும் கொடுப்பனவு வழங்கப்பட்டவர்களின் கடன் குறைத்தல் செயற்பாடுகள்

வைப்பு நிதி என்பது உள்நாட்டு நிறுவனங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்ட (LGIIP) தின் B உப பிரிவுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கிய கடனுடன் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நிதியுமாகும்மாற்றப்பட்ட நிதி என்பது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு . ம்பந்தப்பட்டசெலவுகளுடன் ச .கடனுடன் வழங்கப்பட்ட நன்கொடைகளாகும்ச மாற்றப்பட்ட நிதிகளினால் மேற்கொள்ளப்படும் பிரதான விடயங்களினால் கிடைக்கப்பெறும் வட்டிகளுக்கு ஏற்ப முறையாக வருடாந்தம் கழிக்கப்படுவதுடன் அவ்வாறே அதற்கேற்ப வைப்பிலிடும் நிதியானது முறைப்படி செய்யப்படும்இ .தனால் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வாடகைகளுக்கு கிடைக்கும் ஒன்றிணைக்கப்பட்ட இலாபம் வாடகைக்கு முன்னர் உள்ள உண்மையான கழிவு முறைக்குள்ள இலாபத்தில்5%இற்கு குறையாமல் இருக்க வேண்டும் .

## அறவிடப்படாத கடன்கள்

இலங்கை அரச கணக்குகள் வைப்பு முறைத் தரம் இன்படி 23“வருமானங்களைக் கண்டறிதல்” முறைக்கு ஏற்ப நீண்ட காலமாக செலுத்தப்படாமல் இருக்கும் கடன்களின் முதலீட்டு நிதியின் ஒரு பகுதியின் வட்டியையும் செலுத்தப்படாமல் இருக்கும் கடன்களும் வட்டியாகக் கணிக்கப்பட்டு செலுத்தப்படாத வட்டியும், வட்டிக் கணக்கில் இடப்படுவதுடன் அவை நிரந்தரமாக மீளாய்வு செய்யப்படுகின்றது.

.

**நஷ்டமடைந்த கடனுக்கான நிதி ஒதுக்கீடு**

நஷ்டமடைந்த கடன் மற்றும் சந்தேகத்திற்கிடமான கடனை திரும்ப அறவிடுவதற்காக வெவ்வேறாக விசேட நிதி ஓதுக்கீடு செய்யப்படும்.

**அறவிடப்படாத கடனுக்கான வருமானங்களைக் கண்டறிதல்**

எந்த ஒரு அடிப்படையிலும் கடன் /செலுத்தப்படாமல் இருப்பவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வருமானம் தொடர்பாக அவற்றினை மேற்கொண்டு பராமரிப்பதை இடைநிறுத்துவதுடன் நிதி என்ற வகையில் மட்டும் அவை வருமானமாகக் கருதப்படும்

**தேய்மானம்**

ஒவ்வொரு சொத்து வகுப்பு அடிப்படையில் கீழ் வரும் வகையில் பொதுவான முறைப்படி தேய்மானப் பெறுமதி ஒதுக்கீடு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| பொருத்துதல் | - | 25% |
| காரியாலய உபகரணம் | - | 20% |
| காரியாலயப் பொருட்கள் | - | 05% |
| வாகனம் | - | 20% |

சொத்துக்களின் விலைக்கு ஏற்ப அவ்வருடத்தில் இருந்து தேய்மானம் பெறுமதி கணக்கிடப்படும்

**சொத்துக்களும் இயந்திரங்களும்**

சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் விலைக்கு வாங்கிய பொருட்களை அதன் வாங்கிய விலைக்கு அல்லது முதலீட்டுப் பெறுமதிக்கு அல்லது நாளாந்த செலவு அடிப்படையில் கணக்கிட்டு தேய்வுப் பெறுமானம் கழிக்கப்பட்டு அறிக்கை செய்யப்படும் .முதலீட்டுச் சொத்துக்களின் பாவிப்பு தரத்தின்படி அதற்கான செலவுகள் அனைத்தும் ஒதுக்கீட்டுக்குள் ஒன்று சேர்த்தல்ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டவைகளுக்கு ஒப்பந்த விலைய ,ில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கடன் வழங்குதல்**

உப திட்டங்களுக்கான வேலைகள் செய்யப்பட்டு வருவதுடன் வழங்கப்பட்ட கடன் நிதிக்கான வட்டியினை வேலைகள் முடிவுற்றதும் கடன் நிதியுடன் சேர்த்து ஆரம்ப நிதியுடனான தவணைப்பணத்துடன் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனநிதியினை . அவர்கள் வைத்திருப்பதனை விட அதற்கு முன்னர் கடைசி தினத்திற்கு அவ்வட்டியினையும் மூலதனத்தினையும் கடைசித் தினத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

**பொறுப்பு**

செலுத்தவேண்டிய பற்றுச்சீட்டுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் உள்ள சகல முதல் பொறுப்புகள் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் செலுத்த ,வேண்டிய கொடுப்பனவு மற்றும் செலவுகள் உள்ளடங்கலாகும்.

.

**ஊக்குவிப்பு**

நிரந்தர ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளத்திற்கான விகிதாசாரப்படி அவர்களது ஊக்குவிப்புகொடுப்பனவுகளை ஒதுக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஊழியர் சேமலாப நிதியம்**

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் ஊழியர் சேமலாதநிதிகாக 12% பங்களிப்புச் செய்வதுடன் ஊழியர்களின் பங்களிப்பி 8% ஆகும்.

**ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர்களின் நம்பிக்கை நிதியத்திற்கு உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியமானது 3% ஆன பங்களிப்பினை வழங்குகின்றது.

**வருமானம் வெளியீடுகள்**

**வட்டி வருமானம்**

வருமதியான வட்டியினை உபயோகிக்கும் வகையில் கணக்கிட்டு வரப்படுகின்றது . செலுத்தப்படாமல இருக்கும் கடன்களின் வட்டி அறவிட முடியாத வட்டிக்கணக்கில் சேர்க்கப்பட்டு நிதியாக குறிப்பிட்ட வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளது .

**வட்டியும் ஏனைய செலவுகளும்**

செலுத்த வேண்டிய வட்டியும் ஏனைய செலவுகளும் உபயோகிக்கப்படும் வகையில் அறியப்பட்டுள்ளது

**கடன் மற்றும் ஒப்பந்தங்கள்**

ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தக் 2006.01.19ஆந் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பமிடப்பட்ட 2201 SRI (SF) கடன் இலக்கம் நடைமுறைப்படுத்தவதற்கான உடன்படிக்கை பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் B உப பிரிவின் கீழ் 42.5 அமெரிக்க டொலரை உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகார சபைகளின் வகைப்படுத்தலுக்கு அமைவாக மாற்றமடையும் விகிதாசாரத்திற்கு கடன் மற்றும் நன்கொடை பெற்றுக்கொள்ளப்படும். உப கடன் உடன்படிக்கையின் 1.01பந்தியின் படி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பமிட்ட கடன் உடன்படிக்கையின் 3.01 (a) பந்திபடி உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்படும் கடன் அளவு விசேட பற்று கணக்கில் இரணூற்று நாற்பத்தாறு இலட்சத்து அறுபத்தேழாயிரத்திற்கு (SDR2 4,667,000) சமமான தொகையாகும். கடன் மீள செலுத்தல், 32 ஆண்டுகளுக்குள் மும்மாதங்களில் 96 அமர்வுகளில் 08 ஆண்டுகள் சலுகை காலத்துடன் முடித்தல் வேண்டும்.

வட்டி செலுத்தல் சலுகை காலப் பகுதிக்குள் 1% ம், அதன் பின்னர் 1.5 % ம் ஆகும். அதனை மும்மாதங்களுக்கொருமுறை தவணையின் இறுதியில் இருந்த கடன் மீதியை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும்.

வட்டி கொடுப்பனவுகள் வருடத்திற்கு1% மாகவும் அதன் பின்னர் உள்ள காலத்திற்கு 1.5% கவும் இருக்கும்அதுவும் மூன்று மாதத்திற்கு என்ற தவணை .ப் பணத்தைச் செலுத்த வேண்டும் என்றபடி அவ் விகிதாசாரப்படி மிகுதித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் நிதிக்காக 9%வட்டியினை அறவிடுவதுடன் நன்கொடையின் அளவுக்கு வட்டி செலுத்துவதற்குரிய படி செயற்பட வேண்டும்.அவற்றிற்குரிய நன்கொடை முகாமைத்துவம் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு எதிர் காலத்தில் அதிகமான தாக்கத்தினை ஏற்படுத்தும் .

.............................................

எச்கமல் பத்மசிறி .ரீ.
தலைவர்,

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
செயலாளர் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு -

# தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## 2014.12.31 திகதியில் கடன் வழங்கல்


| இல | உள்ளூராட்சி நிறுவனம் | மாகாணம் | நிதி (ரூபா) | வராந்தச் சந்தை அமைத்தல் மற்றும் அபிவிருத்தி | குடிநீர் திட்டம் | பிண எரிப்பு நிலையம் அமைத்தல் | உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | பொது சந்தை கட்டிடம் அமைத்தல் | உழவு இயந்திரம் கொள்வனவு செய்தல் | டபிள்கப் வாகனம் கொள்வனவு செய்தல் | ஏனைய வருதானம் கூடிய வேலைத்திட் டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தெவிநுவர பி.ச | தென் | 3,000,000 | | | | 3,000,000 | | | | |
| 02 | பூஜாபிட்டிய பி.ச | மத்திய | 2,216,000 | | | | 2,216,000 | | | | |
| 03 | வலப்பிட்டிய பி.ச | தென் | 2,520,000 | 2,520,000 | | | | | | | |
| 04 | மடுல்ல பி.ச | ஊவா | 8,000,000 | | | | 8,000,000 | | | | |
| 05 | கல்கமுவ பி.ச | வட மேல் | 5,500,000 | | | 5,500,000 | | | | | |
| 06 | கஹவத்தை பி.ச | சப்ரகமுவ | 11,140,000 | | | | | 11,140,000 | | | |
| 07 | பஸ்கொட பி.ச | தென் | 2,775,000 | 2,775,000 | | | | | | | |
| 08 | தலவாகெல்ல ந.ச | மத்திய | 5,600,000 | | | 5,600,000 | | | | | |
| 09 | களுத்துறை | மேல் | 6,100,000 | | | 6,100,000 | | | | | |
| 10 | மாத்தளை | மத்திய | 6,000,000 | | | | | | | 6,000,000 | |
| 11 | தெஹிவளை-கல்கிஸை ம.ந.ச | மேல் | 8,850,000 | | | | 8,850,000 | | | | |
| 12 | மகரகம ந.ச | மேல் | 3,000,000 | | | | | | 3,000,000 | | |
| 13 | அம்பகமுவ பி.ச | மத்திய | 13,627,730 | | | | | 13,627,730 | | | |
| 14 | கலவான பி.ச | சப்ரகமுவ | 3,500,000 | | | | | 3,500,000 | | | |
| 15 | தும்பனை பி.ச | மத்திய | 6,825,000 | | | | | 6,825,000 | | | |
| 16 | தமன்கடுவ பி.ச | வட மத்திய | 29,100,000 | | | | | 29,100,000 | | | |
| 17 | வெலிகம ந.ச | தென் | 3,900,000 | | | | 3,900,000 | | | | |

| இல | உள்ளூராட்சி நிறுவனம் | மாகாணம் | நிதி (ரூபா) | வராந்தச் சந்தை அமைத்தல் மற்றும் அபிவிருத்தி | குடிநீர் திட்டம் | பிண எரிப்பு நிலையம் அமைத்தல் | உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | பொது சந்தை கட்டிடம் அமைத்தல் | உழவு இயந்திரம் கொள்வனவு செய்தல் | டபிள்கப் வாகனம் கொள்வனவு செய்தல் | ஏனைய வருதானம் கூடிய வேலைத்திட் டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | மினுவான்கொட பி.ச | மேல் | 26,000,000 | | | | | 26,000,000 | | | |
| 19 | கடுவெல ம.ந.ச | மேல் | 40,000,000 | 40,000,000 | | | | | | | |
| 20 | இமாதுவ பி.ச | தென் | 2,280,000 | 2,280,000 | | | | | | | |
| 21 | வெண்னப்புவ பி.ச | வடமேல் | 910,000 | | | | | | | | 910,000 |
| 22 | பஸ்வாகே கோறளை பி.ச | மத்திய | 5,000,000 | | 5,000,000 | | | | | | |
| 23 | வணாத்தவில்லு பிச | வடமேல் | 20,000,000 | | | | 20,000,000 | | | | |
| 24 | கொட்டபொல பி.ச | தென் | 9,200,000 | | | | 9,200,000 | | | | |
| 25 | அனுராதபுரம் ம.ந.ச | வடமத்திய | 31,249,000 | | | | 31,249,000 | | | | |
| 26 | வாரியபொல பி.ச | வடமேல் | 7,400,000 | | | 6,500,000 | | | | | 900,000 |
| 27 | நாரமல பி.ச | வடமேல் | 4,700,000 | | | 4,700,000 | | | | | |
| 28 | உடபெத்தாவ பி.ச | வடமேல் | 3,000,000 | | | 3,000,000 | | | | | |
| 29 | குருநாகலை (தியாவ) பி.ச | வடமேல் | 6,500,000 | | | 6,500,000 | | | | | |
| 30 | குருநாகலை (மாஸ்பொத்த) பி.ச | வடமேல் | 6,500,000 | | | 6,500,000 | | | | | |
| 31 | ரிதிகம பி.ச | வடமேல் | 6,500,000 | | | 6,500,000 | | | | | |
| 32 | ஆணமடுவ பி.ச | வடமேல் | 6,250,000 | | | 6,250,000 | | | | | |
| 33 | சிலாபம் பி.ச | வடமேல் | 6,250,000 | | | 6,250,000 | | | | | |
| | மொத்தம் | | 303,392,730 | 47,575,000 | 5,000,000 | 63,400,000 | 86,415,000 | 90,192,730 | 3,000,000 | 6,000,000 | 1,810,000 |

## கடன் வழங்குதல் - மாகாணங்களுக்கு ஏற்ப


### 2014 வருடம்

| மாகணம் | நிதி (ரூபா) | வீதம் (%) |
|---|---|---|
| மேல் | 83,950,000 | 27 |
| தென் | 23,675,000 | 08 |
| வடமேல் | 73,510,000 | 24 |
| மத்திய | 39,268,730 | 13 |
| சப்ரகமுவ | 14,640,000 | 05 |
| வடமத்திய | 60,349,000 | 20 |
| ஊவா | 8,000,000 | 03 |
| மொத்தம் | **303,392,730** | **100** |



## கடன் வழங்கல் - 2014 ஆம் வருடம்
## உள்ளூராட்சி நிறுவனபிரிவுகளிற்கு ஏற்ப

| உள்ளூராட்சி நிறுவன பிரிவு | நிதி (ரூபா) | வீதம் (%) |
|---|---|---|
| மாநகர சபை | 80,099,000 | 26 |
| நகர சபை | 18,750,000 | 06 |
| பிரதேச சபை | 204,543,730 | 67 |
| **மொத்தம்** | **303,392,730** | **100** |



## தேசிய கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## திறைசேரிக்கு கடனை திரும்பச் செலுத்துதல் 2010 - 2014

ரூபா மில்லியன்

| ஆண்டு | தவணைப்பணம் | | | | வட்டி | | | | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | LLDF | PCDP | UDLIHP | LGIIP | LLDF | PCDP | UDLIHP | LGIIP | |
| **2010** | 22.9 | 0.17 | 56.2 | - | 25.1 | 6.0 | 67.2 | - | 177.7 |
| **2011** | 22.9 | 1.15 | 56.2 | - | 23.5 | 6.0 | 67.2 | 34.7 | 211.6 |
| **2012** | 22.9 | 1.26 | 109.6 | - | 21.8 | 7.6 | 90.8 | 29.0 | 283.0 |
| **2013** | 22.8 | 1.02 | 90.8 | - | 20.4 | 5.8 | 99.0 | 35.6 | 275.4 |
| **2014** | 22.5 | 3.80 | 90.8 | - | 18.6 | 5.2 | 100.0 | 35.0 | 275.9 |
| **மொத்தம்** | **114.0** | **7.40** | **403.6** | **-** | **109.4** | **30.6** | **424.2** | **134.3** | **1223.6** |

உள்ளூராட்சி நிறுவனங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ்(LGIIP)வழங்கப்பட்ட கடன் நிதிக்கு சலுகைக் காலத்தில் வட்டியினை மட்டும் திறைசேரிக்கு வழங்குதல்.


| | |
|---|---|
| LLDF | உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் |
| PCDP | பல் இன பயிர்களின் அபிவிருத்தி திட்டம் |
| UDLIHP | நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீட்டுத் திட்டம் |
| LGIIP | **உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்** |

**திறைசேரிக்கு கடனை திரும்பச் செலுத்துதல் 2010 - 2014**

**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் (LLDF)**

| வருடம் | தவணைக் கட்டணம் | வட்டி |
|---|---|---|
| 2010 | 22.9 | 25.1 |
| 2011 | 22.9 | 23.5 |
| 2012 | 22.9 | 21.8 |
| 2013 | 22.8 | 20.4 |
| 2014 | 22.5 | 18.6 |


ரூபா மில்லியன்



திறைசேரிக்கு கடனை திரும்பச் செலுத்துதல் 2010 - 2014
பல் இன பயிர்களின் அபிவிருத்தி (PCDP)

ரூபா மில்லியன்


| வருடம் | தவணைக் கட்டணம் | வட்டி |
|---|---|---|
| 2010 | 0.17 | 6.0 |
| 2011 | 1.15 | 6.0 |
| 2012 | 1.26 | 7.6 |
| 2013 | 1.02 | 5.8 |
| 2014 | 3.80 | 5.2 |



**திறைசேரிக்கு கடனை திரும்பச் செலுத்துதல் 2010 - 2014**
**நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீட்டுத் திட்டம் (UDLIHP)**

ரூபா மில்லியன்


| வருடம் | தவணைக் கட்டணம் | வட்டி |
|---|---|---|
| 2010 | 56.2 | 67.2 |
| 2011 | 56.2 | 67.2 |
| 2012 | 109.6 | 90.8 |
| 2013 | 90.8 | 99.0 |
| 2014 | 90.8 | 100.0 |



## திறைசேரிக்கு கடனை திரும்பச் செலுத்துதல் 2011 - 2014
## உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் (LGIIP)

ரூபா மில்லியன்


| வருடம் | திறைசேரிக்கு வட்டி செலுத்துதல் |
|---|---|
| 2011 | 34.7 |
| 2012 | 29.0 |
| 2013 | 35.6 |
| 2014 | 35.0 |





## உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## செயற் திறன் 2010 - 2014

ரூபா'000

| வருடம் | வழங்கிய கடன் | தவணைக் கட்டன அறவீடு | கடன் வட்டி அறவீடு |
|---|---|---|---|
| 2010 | 126,195 | 120,487 | 50,062 |
| 2011 | 105,707 | 131,766 | 49,899 |
| 2012 | 76,249 | 115,281 | 51,231 |
| 2013 | 225,479 | 124,086 | 54,394 |
| 2014 | 303,392 | 130,626 | 53,694 |



විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. பீஏஎவ்/ஜீ/எல்எல்டீஎவ்/1/14/1 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2018 யூலை 25

தலைவர்
உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்

**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ("நிதியம்) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

1.4 **பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எல்கேஏஎஸ் / எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணக்கம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நிதியமானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானத்தை இனங்கண்டிருக்கவில்லை.

**(ஆ) எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

(i) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் பெறுமானத்தேய்வானது, அச்சொத்தானது பயன்பாட்டிற்காக கிடைக்கக்கூடியதாகவுள்ள போது ஆரம்பிக்கப்பட வேண்டிய போதும், நிதியமானது நியமத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக கொள்வனவு

3

செய்த ஆண்டிலிருந்து அதனுடைய சொத்துக்களை பெறுமானத்தேய்வு செய்திருந்தது.

(ii) ரூபா 1,023,128 மொத்த கொண்டு செல்லும் தொகையுடைய முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் 79 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியமானது அதனுடைய நிலையான வைப்புக்கள் மீதான வட்டியினை அட்டுறு அடிப்படையில் கணிப்பீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான ரூபா 9,551,435 வட்டி வருமானம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமதி வட்டி ரூபா 24,966,196 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி பட்டியல் மீதான வட்டி வருமானமானது வட்டியினை செலவு வைக்கையில் பதிவழிக்கப்பட்ட ரூபா 1,280,877 தொகையான பிடித்து வைத்தல் வரி, மற்றும் ரூபா 492,161 தொகையான பெயரளவு வரி என்பவற்றை தேறிய அடிப்படையில் கருத்திற்கொள்ளாமல் நிதிக்கூற்றுக்களில் எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 1,773,038 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கணனிகள் மற்றும் அலுவலக உபகரணத்திற்கான மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வானது கணிப்பீடு செய்யப்பட்டு வருமானக் கூற்றுக்களில் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் (பீபீஈ) பெறுமதி ரூபா 906,423 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் கணனி வன்பொருள் மற்றும் மென்பொருளிற்கு மேலதிகமாக ரூபா 2,349,238 தொகை தவறுதலாக வரவு பீபீஈக்கு வைக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்காக நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட கடன் நிறுவனமொன்றின் விபரங்கள் இந்த அறிக்கையின் கணக்காய்வுத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட பீபீஈ யின் உண்மைத்தன்மை மற்றும்

பொருந்தும்தன்மையினை கணக்காய்வில் நிச்சயப்படுத்தப்பட்டிருக்க முடியவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டில் பொதுப்பேரேட்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,586,139 தொகையான எல்எல்டீஎவ் நவீன சொத்துக்கள் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தளபாடம் மற்றும் பொருத்துகைகளிற்கு மேலதிகமாக மீள் இனங்காணப்பட்டிருந்தது. மேலும், ரூபா 958,169 தொகையான பதவியணி பயிற்சிச் செலவினங்கள் தளபாடம் மற்றும் பொருத்துகைகளின் கீழ் சொத்தொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான மொத்தச் சொத்துக்கள் மற்றும் பெறுமானத்தேய்வின் பெறுமதி முறையே ரூபா 4,544,308 மற்றும் ரூபா 1,020,841 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் பதிவழிக்கப்பட்ட முறையே ரூபா 1,216,741 மற்றும் ரூபா 1,306,001 தொகையான நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் (யூடிஎல்ஐஎச்பி) தொடர்பான நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வருமதி வட்டி 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களிற்கு வருமதிகளாக கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைச்சொத்துக்களின் கீழும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும் காசு மீதியாக ரூபா 19,500,745 தொகை காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அவ் மீதிகளை இனங்கண்டு அறவிடுவதற்கு அல்லது அத்தகைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடன் பட்டியலின் பிரகாரம், தம்புள்ள மற்றும் கண்டி மாநகர சபைகளிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வட்டி முறையே ரூபா 17,929,308 மற்றும் ரூபா 21,948,185 ஆகவிருந்தது. எனினும், அத்தகைய மீதிகள் மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிதியத்தின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டிலிருந்து நிதியமானது தொடர்ச்சியான நட்டத்தை ஏற்படுத்துவதுடன் இது நிதியத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதியில் முக்கிய பின்னடைவை விளைவித்திருந்தது. இந்த நிகழ்வானது பொதுத் திறைசேரியிடமிருந்து உதவி இல்லாவிடத்து தொடர்ந்து

செல்லும் எண்ணக்கருவாக தொடர்ந்தியங்குவதற்கான கம்பனியின் இயலுமையானது முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தும். மேலும், நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் இந்த உண்மை வெளிப்படுத்தவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நேரொத்த பதிவேடுகளிலும் காட்டப்பட்ட கடன்களின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 700,805,504 தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிகளிற்கும் நட்டக்கழிவு ஏற்பாடுகளிற்கிணங்க கருதப்பட்ட கடன்பட்டோர் மீதிகளிற்கும் இடையே ரூபா 1,996,692,218 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

(இ) கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தலின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி பட்டியல் தொடர்பில் மொத்த முதலீடுகள் ரூபா 70,454,440 ஆகவிருந்தது. எனினும், இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 59,230,275 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 11,224,165 இற்கான வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெறவில்லை.

(ஈ) வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு வைப்புக்களிலுள்ள மீதி ரூபா 43,502,811 ஆகவிருந்தது. எனினும், இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 99,097,477 ஆக காட்டப்பட்டிருந்தது. அதனால், சேமிப்புக்களிலுள்ள வைப்புக்கள் ரூபா 55,594,666 ஆல் பின்னடைவிலிருந்தது.

(உ) கிடைக்கபப்பெற்ற தகவலின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுதிறைசேரிக்கு செலுத்த வேண்டிய வட்டி வருமதி ரூபா 5,784,198 ஆகவிருந்தது. இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 117,095,177 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால், அந்த இரண்டு கணக்குகளிற்கிடையில் ரூபா 111,310,979 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் வீடமைப்பு செயற்திட்டத்திற்கான கடன்களிற்கான வட்டிவீதத்தை 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு வருடாந்தம் குறைப்பதற்கு 2014 ஒக்தோபர் 03 ஆணையாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 617,697,468 பெறுமதியான கடன்களினை அதற்கிணங்க மீள்பட்டியலிடுவதற்கு நிதியமானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 246 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 134 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 112 மில்லியன் அல்லது 84 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் ரூபா 32,535,852 ஆல் அல்லது 24.7 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நட்டக்கழிவு மற்றும் காலக்கழிவு முறையே ரூபா 48,219,301 மற்றும் ரூபா 55,060,150 அல்லது முறையே 33.2 சதவீதம் மற்றும் 22 சதவீதத்தால் குறைவடைந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

நிதியத்தின் பெறுமதிச் சேர்க்கையானது மீளாய்வாண்டில் ரூபா 115,324,361 எதிர்மறைப் பெறுமதியை காட்டுவதுடன் முன்னைய ஆண்டிலும் இது ரூபா 233,530,390 எதிர்மறைப் பெறுமதியாகவிருந்தது. ஆகையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பெறுமதி சேர்க்கை ரூபா 118,206,029 ஆல் அதிகரித்தது.

**3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு**

**3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | 2014 | 2013 |
|---|---|---|
| மொத்த வருமானத்திற்கான தேறிய நட்டம் (சதவீதம்) | 39.07 | 73.75 |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 23.19 | 16.7 |

மேற்கூறப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், வருமானத்திற்குரிய தேறிய நட்டம் மீளாய்வாண்டில் 34.68 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1993 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் பிரிவு 05 இன் பிரகாரம், நிதியத்தால் வழங்கப்படக்கூடிய கடன் உடன்படிக்கை நோக்கமானது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்ட பொது பயன்பாட்டின் எந்தவொரு வேலைக்காகவுள்ள தொழில்நுட்ப உதவியை உள்ளடக்கி மேற்கொள்வதற்கு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிதியமானது ஐந்து வகைப்படுத்தலின் கீழ் கடன்களை வழங்கியிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மற்றும் முன்னைய ஆண்டிலுள்ள நிலுவையாகவுள்ள மீதியானது பின்வருமானது.

| கடன் வகைப்படுத்தல் | நிலுவையாகவுள்ள கடன் மீதி<br>2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | <br>2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் | 816,654,556 | 638,603,693 |
| நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டம் | 1,711,357,137 | 1,761,718,573 |
| உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் | 1,694,276,103 | 1,810,665,745 |

| | | |
|---|---|---|
| மீள்நடுகை பயிர்கள் அபிவிருத்தி செயற்திட்டம் | 61,847,623 | 69,356,658 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 8,717,505 | 9,215,880 |
| | --------------------- | ----------------------- |
| மொத்தம் | 4,298,852,924 | 4,289,560,549 |
| | =========== | ============ |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு மற்றும் உள்ளுராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற வகைப்படுத்தல்களின் கீழ் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 83 சதவீதம் மற்றும் 79 சதவீதத்திற்கு மேல் நிதி வசதிகளை வழங்கியது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீண்ட கால நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் ரூபா 2,335.23 மில்லியனானதுடன் இது ரூபா 1,402.53 மில்லியன் மூலதன நிலுவைகள் மற்றும் ரூபா 932.70 மில்லியன் வட்டி நிலுவைகளை உள்ளடக்கியுள்ளது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் வகைப்படுத்தல் | ஆரம்ப கடன் | நிலுவையாக வுள்ள மூலதனம் | நிலுவையாக வுள்ள வட்டி | மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| உள்ளுராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் | 492.12 | 484.99 | 135.77 | 620.76 |
| உள்ளுர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் | 32.25 | 31.73 | 2.43 | 34.16 |
| மீள்நடுகை பயிர்கள் அபிவிருத்தி செயற்திட்டம் | 12.00 | 12.00 | 17.93 | 29.93 |
| நகர அபிவிருத்தி மற்றம் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் | 919.45 | 873.81 | 776.57 | 1,650.38 |
| | 1,455.82 | 1,402.53 | 932.70 | 2,335.23 |
| | ======= | ======= | ======= | ======= |

9

Auditor General's Department

(i) எல்ஜீஸஜபி, பிசீடீபீ மற்றும் யூடிஎல்ஜஎச்பீ தொடர்பில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வட்டி நிலுவைகள் ஆனது முறையே 22 சதவீதம், 60 சதவீதம் மற்றும் 47 சதவீதமாகவிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் தொடர்பில் பகுப்பாய்வொன்றை வழங்குவதற்கு நிதியம் தவறியிருந்தது.

(iii) தம்புள்ள பிரதேச சபைக்குரிய மீள்நடுகை பயிர்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 12,000,000 தொகையில் கடன் 2010 திசெம்பர் 31 அளவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நிதியத்தால் எந்தவொரு தனிப்பட்ட தவணைக்கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.2 ஒப்பந்த நிர்வாகம்

அரச பெறுகை வழிகாட்டிகளிலுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,286,729 பெறுமதியான கட்டிட புத்தாக்க ஒப்பந்தம் தொடர்பில் நிதியத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) 2.8.1(அ) ஆம் வழிகாட்டி பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு குழு இரண்டிலும் எந்தவொரு உறுப்பினர் இல்லாத போதும் நபரொருவரானவர் இரண்டு குழுக்களிற்கும் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) 5.2.1 ஆம் வழிகாட்டி விலைக்கூறு ஆவணங்களானது விலைமனு ஆவணங்களை தயாரிப்பதற்கான முன்னைய விலைமனுதாரருக்கான உரிய தேவையான அனைத்து தகவல்களையும் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், இந்த நோக்கங்களிற்காக வழங்கப்பட்ட விலைகூறு ஆவணங்களில் விலைக்கூறு திறத்தல் திகதி மற்றும் நேரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 5.3.1 மற்றும் 5.3.5(அ) ஆம் வழிகாட்டி விலைமனுக்களை கோருவதற்காக நியம விலைமனு ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிர்வாகத்திலான பதிவிற்கான தேவை விலைக்கூறு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 6.1.4 ஆம் வழிகாட்டி நிதியமானது விலைமனு ஆவணங்களின் விநியோகித்தல் தொடர்பான பதிவேட்டை பேணியிருக்கவில்லை.

10

(உ) 8.13.3 ஆம் வழிகாட்டி முரண்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைக்கான ஏற்பாடானது மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் பத்து சதவீதத்தை (10%) மிஞ்சலாகாது. எனினும், 107 சதவீத முரணானது இந்த ஒப்பந்தம் தொடர்பில் அவதானிக்கப்பட்டது.

## 4.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

1997 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 124 ஆம் இலக்க நிதிசார் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், வெற்றிடமாகவுள்ள பதிவியின் கடமைகளை மேவுகை செய்தலானது 03 மாதங்கள் காலப்பகுதிக்கு வரையறுக்கப்பட வேண்டும். எனினும், பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், மற்றும் உதவி கணக்காளர் 2014 ஆம் ஆண்டிலிருந்து பதிலீட்டு அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

## 4.4 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், நிதியமானது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி கணக்கில் 43,502,810 தொகையை பராமரித்ததுடன் இந்த மீதியானது 2014 சனவரி 01 இல் உள்ளவாறான கணக்கில் ரூபா 158,587,835 ஆகவிருந்தது. அதற்கிணங்க நிதியமானது, முறையான முதலீட்டு வளங்களில் மிகை நிதியை முதலீடு செய்வதினூடாக அதிகூடிய வருமானத்தை பெறுவதற்காக அதனுடைய நிதி வளங்களை முகாமை செய்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) நிதியமானது அதற்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்களை காலக்கழிவு செய்திருந்ததுடன் குறித்துரைக்கப்பட்ட முறையை பயன்படுத்துவதன் மூலம் நிதியத்தால் மானியங்கள் வழங்கப்பட்டது. எனினும், இந்த முறைமைக்காக பணிப்பாளர் சபையிடமிருந்து அனுமதியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

அலுவலக கட்டிட நிர்மாணம், நூலக மற்றும் ஞாபகார்த்த மண்டபங்கள் மற்றும் ஏனைய வருமானத்தை உழைக்கின்ற செயற்திட்டங்கள் போன்றவற்றின் நிர்மாணத்தை உள்ளடங்குகின்ற இரண்டு நடவடிக்கைகளிற்காக ரூபா 85 மில்லியன் பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, நிதியமானது பாதீட்டிலுள்ள ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அத்தகைய செயற்திட்டங்களிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியங்களை பயன்படுத்தியது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரானவர் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டார். எனினும், மீளாய்வாண்டின் போது ஒரேயொரு கணக்காய்வு ஐய வினா மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. ஆகையால் நிதியமானது 2011 ஆம் ஆண்டிலிருந்து நட்டத்தை தொடர்ச்சியாக எதிர்கொள்வதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 939,752,302 எதிர்மறை தேறிய சொத்துக்களை வைத்துள்ளமையால், நிதியத்தின் பாரிய இடர் பரப்புக்களை மேற்கொள்வதற்காக தனியான உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று இருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நிதியத்தின் தலைவரின் காலத்திற்கு காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நிதியமானது கடன் மீதிகளிலுள்ள விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்களை குறைப்பதற்கு பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. |

12

| | | |
|---|---|---|
| (ஆ) | கடன் சேவைகளின் பராமரிப்பு | தேவையான தகவல்கள் உள்ளடக்காமல் கடன்கோவைகள் பராமரிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | செயற்பாடற்ற கடன்கள் | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அறிக்கையிடப்பட்ட செயற்பாடற்ற கடன் மீதிகளை அறவிடுவதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்காமை. |

டபிள்யூ.பி.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)